
# திருமறை ஆசான்

## புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் 2 | அக்டோபர் 1989 | இதழ் 10

பரிசுத்த



வேதாகமம்

வெளியிடுவோர்:-

**ஈரோடு கிறிஸ்துவின் சபையார்,**

2, மணல் மேடு வீதி, ஈரோடு-638 002.

நீங்கள் ஈரோட்டில் இருக்க நேர்ந்தால் கீழ்க்கண்ட நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு கர்த்தருடைய பிள்ளைகளோடு சேர்ந்து ஆராதியுங்கள்.

இடம் : 2, மணல்மேடு வீதி, ஈரோடு-638 002.

நாளும் நடப்பும்

ஞாயிறு : காலை 9-30—11-00...காலை ஆராதனை
,, : ,, 11-00—12-00...ஞாயிறு பள்ளி
,, : மாலை 7-15—8-30...மாலை ஆராதனை
செவ்வாய் : மாலை 7-15—8-30...குடும்ப ஜெபம்
புதன் : மாலை 3-30—5-00...சகோதரிகள் ஐக்கிய கூட்டம் (ஒரு வாரம் விட்டு ஒரு வாரம்)
வியாழன் : மாலை 7-15—8-30...வேதாகம ஆய்வு
சனி : மாலை 7-00—9-00...மன்றுட்டு ஜெபம்

---

## இதழின் உள்ளே

1. உன்னை நீயே எண்ணிப்பார் 1
2. சிலபேர் ஏன் தேவனுக்கு கீழ்ப்படிவதில்லை 5
3. கிறிஸ்தவ வாழ்க்கை 10
4. தெரிந்து கொள்ளுங்கள் 13
5. ஆயிரம் வருட ஆட்சியா! அது என்ன? 17
6. கர்த்தருடைய இராபோஜனம் 23
7. கேள்வி—பதில் 25

# Thirumarai Aasaan

Editor
E. Z. SELVANAYAGAM

Honorary Editor:
J. C. CHOATE

**Published by Church of Christ**
**2, Manalmedu Street, ERODE - Tamil Nadu. India**
Pleading for the restoration of pure New Testament Christianity

Vol 2. October 1989 Issue 10

**ஆசிரியவுரை**

# உன்னை நீயே எண்ணிப்பார்!

தேவனால் படைக்கப்பட்ட எல்லா உயிரினங்களைக் காட்டிலும் மனிதனே மிகச் சிறந்தவன். அவனைப் படைப்பின் சிகரம் என்றே கூறலாம். ஏனெனில் அவன் தேவ சாயலிலே படைக்கப் பட்டவன். அவனைப் படைக்கும் போது வேறு எந்தப் படைப்புக்கும் செலவிட்டிராத சிறப்புக் கவனம் செலுத்தப் பட்டது. அண்ட சராசரங்கள் அனைத்தையும் வாய்ச் சொல்லால் படைத்தவர், மனிதனை மட்டும் பூமியின் மண்ணினாலே உருவாக்கி ஜீவ சுவாசத்தை அவன் நாசியிலே ஊதி, அவனை ஜீவாத்துமாவாக்கினார் (ஆதி 2:7) மேலும் படைக்கப்பட்ட அனைத்து உயிர்களையும் ஆண்டு அனுபவிக்கும் அதிகாரத்தையும் அவனுக்குக் கொடுத்தார். (ஆதி 1:26-28)

ஆனால், ஆதி மனிதன் இந்த உண்மைகளை தெரிந்தோ, தெரியாமலோ அசட்டை செய்து, தடம் மாறிக் கெட்டுப் போனான். தனக்கு தேவனால் கொடுக்கப்பட்ட சிறப்பு நிலையை எண்ணிப் பார்க்கத் தவறியதால், மனிதனுக்கு ஏற்பட்டிருக்கிற இழப்பை வர்ணிக்க வார்த்தைகள் இல்லை. இப்பொழுதும் கூட மனிதன் விரும்பினால் தேவ சாயலில் வளர்ந்து ஆசீர்வாதத்தின் உச்சிக்குப் போகலாம். அல்லது பாவத்தின் பலனாகிய படு பாதாளத்தை அடையலாம். இந்தப் பேருண்மையை உணர்ந்து கொள்ளாமல் மனித இனம் இன்றைக்கு அழிவை நோக்கி விரைந்து சென்று கொண்டிருக்கிறது. இந்தப் பரிதாப நிலையை அவனுக்கு எடுத்துக் கூற எவ்வளவு முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டாலும் அது அதிகமல்ல.

ஆனால் நிலைமை என்ன? வரவர மனித இனம் தன்மேன்மையையும் சிறப்பு நிலையையும் பற்றிய மதிப்பீட்டில் தொடர்ந்து தவறுகள் செய்வதாகவே தெரிகிறது. ஒருபுறம், மனிதனுடைய ஆற்றலையும் வேலை

செய்யும் திறனையும், பெருகி வரும் இயந்திர சாதனங்களோடு ஒப்பிட்டுப் பார்த்து, மனிதனின் மதிப்பையும், முக்கியத்துவத்தையும் எடை போடுகிறார்கள். ஒரு சிறந்த அறிவியல் நூலை பழைய பேப்பர்காரனிடம் போட்டால் அவன் அதன் உயர்வை அறிய மாட்டான். எடைக்குரிய காசுதான் கொடுப்பான். அது போன்றுதான் இதுவும்.

மற்றொருபுறம் வளர்ந்து வரும் விஞ்ஞான அறிவினால் ஏற்படும் கண்டு பிடிப்புகள், சாதனைகள் ஆகியவைகளை மனதில் கொண்டு, 'மனிதனால் முடியாத காரியம் ஒன்றுமே இல்லை என்று இறுமாந்து, கடவுளே இல்லை. அதைப்பற்றிய சிந்தனையெல்லாம் வீணர்களின் பொழுது போக்கு. மனிதன் தன் அறிவைப் பயன்படுத்தி மண்ணுலகை விண்ணுலகு ஆக்கலாம். மகிழ்ச்சியையும், சமாதானத்தையும் நிலை நாட்டலாம் என்று பேசி, மனிதன் மேல் தேவைக்கும் அதிகமான நம்பிக்கை வைத்து அவனைக் கடவுள் ஸ்தானத்துக்கு உயர்த்தி விடுகிறார்கள். ஆனால் ஆழ்ந்து சிந்தித்துப் பார்ப்பவர்களுக்கு மேற்சொன்ன இரண்டு சிந்தனை யோட்டங்களுமே அபாயகரமானவை; உண்மைக்குப் புறம்பானவை என்பது விளங்கும்.

அப்படியானால் மனிதனுடைய உண்மை நிலைதான் என்ன? என்ற கேள்வி எழுவது நியாயமே. ஒரு பொருளை உருவாக்கியவருக்குத் தான் அதனுடைய உண்மையான மதிப்பும், உயர்வும் மிக நன்றாகத் தெரியும். ஆகவே மனிதனைப் படைத்துப் பராமரித்துப் பாதுகாத்து வருகிறவர், மனிதனின் உண்மையான தன்மையையும், நிலையையும் பற்றி என்ன கூறுகிறார் என்று கீழ் வரும் தேவனுடைய வார்த்தைகளை வாசித்துச் சிந்திப்போம்.

மனிதனுடைய உண்மையான நிலையை விளக்குவதற்கும், அவனுக்கு நம்பிக்கையூட்டி அவனை உற்சாகப் படுத்துவதற்கும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து இந்த பூலோகத்தில் சஞ்சரித்த நாட்களில் இரண்டு முறைகளைப் பயன்படுத்தினார். ஒன்று உபதேசம்: தனக்குக் கிடைத்த வாய்ப்பு அனைத்தையும், மாந்தருக்கும் படைத்தவராகிய தேவனுக்கும் உள்ள உறவின் இரகசியத்தை எளிய உவமைகளைக் கொண்டு பாமர மக்களும் புரிந்து கொள்ளும் வகையில் விளக்கிக் கூறினார். தான் சொல்லுகிற அனைத்தும் உண்மை என்பதை மக்கள் நம்ப வேண்டும் என்பதற்காக மனிதரால் செய்ய முடியாத பலவிதமான அற்புத அடையாளங்களையும், பலத்த செய்கைகளையும் செய்து உறுதிப் படுத்தினார்: (யோவான் 20:30,31)

இன்னொன்று: மனிதர்கள் பாவம் செய்யாமல் வாழ முடியும், அப்படிப்பட்ட வாழ்க்கை முறையால்தான் தேவனைப் பிரியப்படுத்த முடியும் என்று அவருடைய தூய்மையான வாழ்க்கை மூலம் வழி காட்டினார்.

மேலும் கிறிஸ்து மனுக் குலத்தின் மீது அப்ரிதமான அன்பு காட்டினார். மத் 9:36; 14:14; மாற்கு 1.41 ஆகிய வசனங்கள் இயேசு கிறிஸ்து மன உருக்கமும், ஏழை எளிய மக்கள் மீது பரிவும் பாசமும் கொண்டவர் என்பதைத் தெளிவாக்குகிறது. அந்நாட்களில் வாழ்ந்த மதத் தலைவர்கள் மக்களை வஞ்சித்து, தங்களுடைய வாழ்க்கை வசதிக்காக, சுய நலத்துக்காக பாமர மக்களைப் பலிக் கடாக்களாக்கி, சொகுசு வாழ்க்கை வாழ்ந்து வந்தனர். ‘ஊருக்குத்தான் உபதேசம்; உனக்கு இல்லையடி’ என்ற பாணியில் தாங்கள் உபதேசிக்கிறதை அவர்கள் கடைப் பிடிக்காமல் போலித்தனமான வாழ்ந்து கொண்டிருந்தனர். (மத் 23:1-2)

மனிதனுடைய உண்மையான மதிப்பை அறிந்திருந்த இயேசுவுக்கு, இது மிகுந்த மனவேதனையைத் தந்தது. வாழ்க்கைப் பெருஞ்சுமையால் தள்ளாடி, கூனிக் குறுகிப் போய் புழுவாய் நெளிந்து கொண்டிருந்த மக்களையும், நோய் நொடிகளால் பாதிக்கப்பட்டு துன்பத்தில் உழன்று கொண்டிருந்த மக்களையும் அவர் பார்த்த பொழுது, அவர்கள் மீது இரக்கம் கொண்டு, அவர்கள் கண்ணீரைத் துடைத்து, ஆறுதல் கூறி அரவணைத்துக் கொண்டார். அவர்களையும் தேவன் நேசிக்கிறார் என்பதை அவர்களுக்கு உணர்த்த பல விதத்திலும் முயன்றார்.

உலகத்தில் அற்பமாக எண்ணப்படுகிற பறவை இனங்களில் அடைக்கலான் குருவியும் ஒன்று. அப்படிப்பட்ட எளிய உயிர்கள் கூட ஆண்டவருடைய பராமரிப்புக்குத் தப்புவதில்லை. அப்படியிருக்கும் போது, அவருடைய படைப்பின் சிகரமான மனிதனைப் பற்றி அக்கரைப்படமாட்டார் என்று நினைத்து, நம்பிக்கை இழந்து சோர்ந்து போவது எவ்வளவு அறியாமை! மனிதனுடைய உயிர் இருக்கட்டும், அவனுடைய முடிகளில் ஒன்றுகூட அவருடைய உத்தரவு இல்லாமல் கீழே விழாது. ஆகவே மனிதனின் சிறப்பு நிலையைக் குலைத்துப் போடும் எந்த இழி செயலுக்கும் ஆளாகக் கூடாது. அதற்கு விலையாக உன் உடலையே அர்ப்பணிக்க நேர்ந்தாலும் அஞ்சக்கூடாது என்று தைரியம் கொடுக்கிறார். (லூக் 12:4-7)

மனிதன் உடைக்காகவும், உணவுக்காகவும் படும் பிரயாசமும், அணுகும் முறையும் தேவையில்லாதது. காலையில் பூத்து, மாலையில் வாடிப் போகும் மலர்கள் காடுகளிலும், மலைகளிலும் யாருடைய பாதுகாப்பும் பராமரிப்பும் இன்றி, கண்ணைக் கவரும் வண்ணங்களில் ஜொலிக்கின்றன. மிகவும் ஆடம்பரப் பிரியரும், வசதிகள் பல படைத்தவருமாகிய சாலமோன் என்னும் அரசனே கூட அவ்வித வண்ணக் கலவை ஆடைகளை அணிந்திருக்க மாட்டான். அப்படியிருக்கும் போது தான் படைத்தவற்றில் சிறந்தவனாகிய மனிதனுக்கு ஏன் செய்ய மாட்டார்? அதேபோல் உணவு சம்பந்தப்பட்ட விஷயத்திலும் பறவைகளை ஒப்பிட்டுக் காட்டினார். அவைகள் விதைப்பதும் இல்லை,

அறுக்கிறதும் இல்லை, களஞ்சியங்களில் சேர்த்து வைப்பதும் இல்லை. ஆனால் எங்காவது பறவையினம் பட்டினியால் மாண்டு போயிற்று என்ற செய்தி கேள்விப் பட்டிருக்கிறீர்களா? அப்படியிருக்க, மனிதன் உடைக்காகவும், உணவுக்காகவும் தன் ஆத்துமாவை அடகு வைத்து நீதி, நேர்மை, அன்பு, இரக்கம் ஆகிய நற்பண்புகளை விற்று, அழிந்து போகிற இந்த உடலைப் பேண வேண்டுமா? என்று கேட்டுச் சிந்திக்கத் தூண்டுகிறார்.

தேவன் வகுத்துத் தந்திருக்கிற பிரமாணங்களில் கூறப்பட்டுள்ள நியமங்களைக் கடைப் பிடித்து வாழ்; அப்பொழுது நீ விரும்புகிற அனைத்தையும் தருவார் என்று ஆன்மாவுக்கும், இறை வழிப்பாட்டுக்கும் கொடுக்க வேண்டிய முக்கியத்துவத்தை உணர்த்துகிறார். (மத் 6:22-33)

பாதை தடுமாறி எங்கே போய்க் கொண்டிருக்கிறோம் என்பதே தெரியாமல் அழிவை நோக்கித் துரித பயணம் போய்க் கொண்டிருக்கும் மனுக்குலத்தின் மீது தேவன் எவ்வளவு கரிசனை உள்ளவராக இருக்கிறார் என்பதை விளக்க ஒரே அதிகாரத்தில் மூன்று உவமைகளைக் கூறி விளக்குகிறார். காணாமற் போன ஆடு, காணாமற் போன வெள்ளிக் காசு, காணாமற் போன மகன் ஆகிய மூன்று உவமைகளிலும், ஒரே ஒரு பாவியின் மனம் திரும்புதல் பரலோகத்தில் எவ்வளவு மகிழ்ச்சிக்குரிய காரியம் என்பதை விளக்கி, தேவன் மானிடர் மேல் கொண்டுள்ள அளவற்ற அன்பைச் சுட்டிக் காட்டுகிறார். (லூக் 15)

பெரும்பான்மையான மனிதர்களுக்கு, தாங்கள் சரீரமும், ஆன்மாவும் உடைய சிறப்பு ஜீவன்கள் என்கிற காரியம் விளங்குவதில்லை. விளங்கினாலும் அதை அவ்வளவு முக்கியமான விஷயமாக எடுத்துக் கொள்வதில்லை. சரீரத்தின் அழிந்துபோகிற தன்மையையும், ஆன்மாவின் நிரந்தரமான தன்மையையும் விளக்குவதற்குப் பின்வருமாறு கூறுகிறார். 'ஆத்துமாவைக் கொல்ல வல்லவராயிராமல் சரீரத்தை மாத்திரம் கொல்லுபவர்களுக்கு நீங்கள் பயப்பட வேண்டாம். ஆத்துமாவையும் சரீரத்தையும் நரகத்தில் அழிக்க வல்லவருக்கே பயப்படுங்கள் (மத் 10:28) மேலும் ஆன்மாவோடு ஒப்பிடும்போது சரீரம் மிக அற்பம். ஆகவே அதனைப் பேணிக் காப்பதற்கு பெரும் பிரயாசம் எடுத்துக் கொண்டு, அதனுடைய விருப்பத்துக்கு அடிமையாகி விடக்கூடாது என்று விளக்குவதற்கு 'ஒருவனுக்கு எவ்வளவு திரளான ஆஸ்தி இருந்தாலும் அது அவனுக்கு ஜீவனல்ல என்கிறார். (லூக் 12:15) ஆனால் நடைமுறை தலைகீழாக இருக்கிறது. நிலையற்றதும், அழிந்து போகக் கூடியதுமான யாக்கையைப் பேணிக் கொண்டு, என்றென்றும் நிலைத்து நிற்கிறதான ஆன்மாவை அசட்டை செய்கிறது எவ்வளவு மதியீனம்! அரிசியைக் குப்பையில் கொட்டிவிட்டு, உமியைப் பத்திரப்படுத்து கிறவனைப் பார்த்து எள்ளி நகையாடுகிறோம்.

(இதன் தொடர்ச்சி 17-ஆம் பக்கம் பார்க்க)

# சிலபேர் ஏன் தேவனுக்கு கீழ்படிவதில்லை ?

உலகம்பாவத்தில்மூழ்கிக் கிடக்கிறது. அதாவது பெருபான்மையான மக்கள் தேவனற்றவர்களாகவும், நம்பிக்கையற்றவர்களாகவும் வாழ்ந்து வருகிறார்கள். தாங்கள் செய்கிற காரியங்களுக்குப் பொறுப்பேற்க அறியாத சிறுவர் சிறுமிகளைப் பற்றியோ குழந்தைகளைப் பற்றியோ நான்இங்கு குறிப்பிடவில்லை. அவர்கள்பத்திரமாக இருக்கிறார்கள். ஒரு குறிப்பிட்ட சதவிகித மக்கள் தேவனுக்குக் கீழ்ப்படிந்து அவருடைய உபதேச சட்டங்களின்படி உண்மையாக வாழ முயற்சித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களைப் பற்றியும் பேச்சில்லை. ஆனால் பெரும்பான்மையான மக்கள் பாவத்துக்கு அடிமைப் பட்டு ஆவிக்குரிய காரியங்களில் செத்தவர்களாக இருக்கிறார்கள்.

ஆனால் இந்த நிலை தொடர்ந்து இருக்க வேண்டும் என்பது கட்டாயமல்ல. பாவத்தில் வாழ்கிற அனைவருமே இரட்சிக்கப்படுவதற்கு வழி உண்டு. அதற்காகத் தான் கர்த்தராகிய இயேசு சிலுவையில் மாண்டார். (ரோமர் 5:8) ஆயினும் அதை எல்லா மக்களுமே ஏற்றுக் கொண்டதாகத் தெரியவில்லை. ஏன் ? அதற்குச் சரியான காரணம் எதுவும் கிடையாது. கேட்டால் ஒவ்வொருவரும் ஏதாவது நொண்டிச் சாக்கு சொல்லுவார்கள்.

அநேகருடைய நினைப்பில் தாங்கள் நன்றாகத்தான் இருப்பதாகவும் தங்களுடைய வாழ்க்கையில் நேர்மை குன்றாமலும், ஒழுக்கம் தவறாதவர்களாக இருக்கிறதாகவும் சொல்லுவார்கள். அப்படிப்பட்டவர்கள் தங்களுடைய நீதிகளும் நற்கிரியைகளும் தங்களை இரட்சிக்கப் போதுமானவைகள்; இயேசு கிறிஸ்து நமக்குத் தேவையில்லை என்று வாதிப்பார்கள். அவர்களுக்கும் இரட்சகர் தேவை என்பதை அவர்கள் உணர்ந்தால் நலமாயிருக்கும்.

அப் 10,11-ம் அதிகாரத்தில் கொர்நெலியுவையும் அவன் வீட்டாரையும் பற்றிப் படிக்கிறோம் அவர்களுடைய வாழ்க்கை முறைகளைக் கவனிக்கும் போது அவர்கள் எவ்வளவோ நல்லவர்கள் என்று நினைக்கத்தோன்றுகிறது. ஆனால் இரட்சிக்கப்படுவதற்கு அவைகள் போதவில்லை. பேதுருவும் அவனுடைய கூட்டாளிகளும் அவர்களிடத்திற்கு அனுப்பப்பட்டு, சுவிசேஷம் அறிவிக்கப்பட்டு, ஞானஸ் நானம் செய்விக்கப்பட வேண்டியதாயிருந்தது அதுஎதைக்காட்டுகிறது?அவர்களுடைய நற்பண்புகள், ஜெபதபங்கள் அவர்களை இரட்சிக்க முடியவில்லை. என்பதைத் தானே ? ஒருவன்

சன்மார்க்க வாழ்க்கை வாழ்வது பாராட்டத் தக்கது. ஆனால் அதுவே அவனை இரட்சித்தும் பரலோகத்துக்கு அழைத்துச்செல்ல முடியாது. தன் சன்மார்க்கம் தன்னை இரட்சிக்கப்போதுமானது என்று சொல்வது ஒருவன் தன்னைத் தானே இரட்சித்துக் கொள்ள முடியும் என்று கடறுவதற்கு ஒப்பாகும். அது ஞானமான முடிவு அல்ல; இரட்சிப்புக்கு இயேசு தேவை.

தங்களைக் கிறிஸ்தவர்கள் என்று கூறிக் கொள்ளுகிற அநேகர் இரட்சிக்கப் படவேயில்லை என்ற உண்மை தெரிந்தால் எவ்வளவு துக்கப் படுவார்கள் என்று நினைத்துப் பார்க்கும் போது வேதனையாக இருக்கிறது. ஏனெனில் அவர்கள் இரட்சிக்கப்படுவதற்கு தேவன் நிர்ணயித்திருக் கிற கட்டளைகளுக்கு முழுமையாய்க் கீழ்படியவில்லை. பரிசேயர்களைப் போலவும், சதுசேயர்களைப் போலவும், சவுல் மற்றும் வேறு அநேகரைப் போலவும்; அறிவுக்கேற்காத வைராக்கியம் கொண்டிருக்கிறார்கள். சபை என்று பொய்யாய்ப் பேர் பெற்றிருக்கிற மனிதரால் ஏற்படுத்தப்பட்ட இயக்கங்களில் அங்கம் வகித்துக் கொண்டும் அவர்கள் மனித ஞானத்தை தேவனுடைய வசனத்தோடு கலந்து செய்கிற ஆராதனையில் கலந்து கொண்டும், மூடநம்பிக்கைகளுக்குத் தீனிபோடும் யுக்திகளைக் கையாண்டு மற்றவர்களைக் கிறிஸ்துவுக்குள் கொண்டு வருவதற்கு முயற்சிகள் மேற்கொண்டும் உற்சாகமாகச் செயல்படுகிறார்கள். ஆனால் பரிதாபம்! அவர்கள் தங்கள் சொந்த இரட்சிப்பை உறுதி செய்யமுடியாமல் ஏமாந்து இருக்கிறார்கள், என்றுதான் சொல்ல வேண்டியிருக்கிறது. இதைப்பற்றி இயேசு "மனுஷருடைய கற்பனைகளை உபதேசங்களாகப் போதித்து வீணாய் எனக்கு ஆராதனை செய்கிறார்கள் என்று வருத்தப்படுகிறார். (மாற்கு 7;7) சவுல் கூட, தான் குணப்பட்ட பிறகு, ஒரு சமயம் தன்னுடைய வாழ்க்கைப் பாதையைத் திரும்பிப் பார்த்து" முன்னே நானும் நசரேயனாகிய இயேசுவின் நாமத்திற்கு விரோதமாய் அநேக காரியங்களை நடப்பிக்க வேண்டுமென்று நினைத்திருந்தேன் என்று வெட்கத்தோடு ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்கிறார் (அப் 26:9)

அதே போன்று இன்றைக்கும் அநேக நன்மக்கள் விபரம் தெரியாமல் மனிதர்களால் உண்டாக்கப்பட்ட ஸ்தாபனங்களில் அங்கம் வகித்துக் கொண்டும், மனிதர்களுடைய பெயர்களைத் தரித்துக்கொண்டும் கிறிஸ்துவின் உபதேசங்களுக்கு முரணானவைகளைப் போதித்துக்கொண்டும், செயல்பட்டுக் கொண்டும் இருக்கிறார்கள் இப்படிப்பட்ட மக்களைச் சத்தியத்துக்குச் செவிகொடுக்க வைப்பது மிகவும் கடினம். ஏனெனில் அவர்கள் தாங்கள் ஏற்கனவே இரட்சிக்கப்பட்டு விட்டதாக எண்ணிக் கொண்டு இருக்கிறார்கள்.

அப்படிப்பட்ட நன்மக்களே தயவுசெய்து உங்கள் வேதபுத்தகத்தைத் திறந்து சம்பந்தப்பட்ட வசனங்களை நீங்களே ஜெபத்துடனும் சத்தியத்தை அறிந்து அதற்குக் கீழ்ப்படிய வேண்டும் என்ற எண்ணத்துடனும்

வாசித்துப் பார்க்கும்படி உங்களைப் பணிவோடும் அன்போடும் கேட்டுக் கொள்கிறோம். அப் 17:11. அப்படிச் செய்யும்போது ஒருகணம் மனிதன் என்ன உபதேசித்தான். நீங்கள் இதுவரை எதை விசுவாசித்தீர்கள் என்பதை மறந்துவிட்டு இரட்சிப்பைப்பற்றியும், சபையைப்பற்றியும், ஆராதனையைப் பற்றியும் வேதம் என்ன சொல்லுகிறது என்றும் தற்சமயம் நீங்கள் நம்பிக் கொண்டிருக்கிறவைகளையும் நடைமுறைப் படுத்திக் கொண்டிருக்கிறதையும் ஒப்பிட்டுப் பாருங்கள். ஏதாவது முரண்பாடு தெரிந்தால் அதை மாற்றிக் கொள்ளத் தயங்காதீர்கள். நாம் அப்பொல்லோவை விட பெரியவர்கள் அல்லவே (அப் 18:24-28) தவறு என்று தெரிந்தும் வரட்டுக்கௌரவம் பார்த்துக் கொண்டு வீண்பிடிவாதம் பிடித்து இறுதியில் நரகத்தில் தள்ளப்படுவதைப்பார்க்கிலும் உண்மையை ஒத்துக் கொண்டு மனம் திரும்பி இரட்சிக்கப்படுவது நல்லது.

இன்னொரு ரக மக்கள் இருக்கிறார்கள். தாங்கள் நாள்தோறும் செய்துவரும் கொடிய பாவங்கள் மற்றும் தவறுகளை எந்தக் கடவுளும் மன்னிக்கமாட்டார். ஆகவே நாம் இப்படியே இன்னும் எஞ்சியுள்ள சிறிது காலத்தையும் கழித்து விட்டு மடிந்து போகலாம் என்ற முடிவோடு ஆண்டவருடைய சமூகத்துக்கு வரத் தயங்கி தவிக்கிறார்கள். அப்படிப் பட்ட மக்களே, சோர்ந்து போகாதீர்கள்! தயவு செய்து அப் 2ஆம் அதிகாரத்தில் சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பாக ஒரு பெந்தெகோஸ்தே பண்டிகை நாளில் நடந்த சம்பவத்தை வாசித்துப் பாருங்கள். அங்கே கூடியிருந்தவர்களில் சிலபேர் இயேசுவைக் கொலை செய்த கூட்டத்தில் இருந்தவர்கள். ஆயினும் பேதுருவும் மற்ற அப்போஸ்தலர்களும் அவர்களைநோக்கி 'இஸ்ரவேலரே நான்சொல்லும் வார்த்தைகளைக் கேளுங்கள், நீங்கள் அறிந்திருக்கிறபடி நசரேயனாகிய இயேசுவைக் கொண்டு தேவன் உங்களுக்குள்ளே பலத்த செய்கைகளையும், அற்புதங்களையும், அடையாளங்களையும் நடப்பித்து அவைகளினாலே அவரை உங்களுக்கு வெளிப்படுத்தினார்.

அப்படியிருந்தும், தேவன் நிர்ணயித்திருந்த ஆலோசனையின் படியேயும் அவருடைய முன் அறிவிப்பின்படியேயும் ஒப்புக் கொடுக்கப்பட்ட அந்த இயேசுவை நீங்கள் பிடித்து அக்கிரமக்காரருடைய கைகளினாலே சிலுவையில் ஆணி அடித்துக் கொலை செய்தீர்கள். தேவன் அவருடைய மரணஉபாதிகளின் கட்டுகளை அவிழ்த்து அவரை எழுப்பினார். அவர் மரணத்தினால் கட்டப்பட்டிருக்கக் கூடாதிருந்தது' (அப் 2:22-24)

இங்கே தேவகுமாரனையே சிலுவையில் அறைந்தவர்களில் சிலர், தங்கள் இருதயத்தில் குத்தப்பட்டு அந்தப் பாவத்திலிருந்து விடுதலை அடைவதற்கு என்ன செய்ய வேண்டும் என்று வினவுகிறார்கள். அவர்-

களுக்கு ' மனம் திரும்பி ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள் என்று ஆலோசனை கூறப்பட்டது. அவர்களும் அதற்குக் கீழ்படிந்து ஞானஸ்நானம் பெற்று பரிசுத்த ஆவியின் வரத்தையும் பெற்றுச் சபையிலும் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள். (அப்2: 36-41) இங்கே கவனித்தீர்களா? அவர்களுடைய கொடிய பாவம் காரணமாக அவர்கள் புறக்கணிக்கப்பட்டார்களா? இல்லையே! அவர்கள் இயேசுவை விசுவாசித்து அவருடைய சுவிசேஷத்திற்குக் கீழ்படியும்போது பாவமன்னிப்புப் பெற்று இரட்சிக்கப்பட்டார்கள். தேவகுமாரனையே சிலுவையில் அறைந்து கொன்ற பாவிகளே இரட்சிக்கப்பட்டிருக்க நானும் நீங்களும் இரட்சிக்கப்படுவது மிக நிச்சயமல்லவா? கிறிஸ்து உலகத்துக்கு வந்ததே பாவிகளை இரட்சிக்கத்தானே! பின் ஏன் தயக்கம்?

உங்கள் தயக்கம் நீங்கஇன்னொரு சம்பவத்தைக் கூடக் காட்டுகிறேன் என்னோடு அப் 9ஆம் அதிகாரத்துக்கு வாருங்கள். சவுல் என்றொரு யூத வாலிபன் அவர்கள் கர்த்தரை எதிர்த்து நின்று சபைகளைத் துன்பப் படுத்திக் கொண்டு வந்தான். ஒருமுறை இயேசு அவனுக்குத் தரிசனமாகி அவரோடே பேசினார். என்ன ஆச்சரியம்! அவன் மனம்மாறி 'ஆண்டவரே! நான் என்ன செய்ய சித்தமாக இருக்கிறீர்' என்று பய பக்தியாய்க் கேட்டான். பின்னர் ஒரு காலகட்டத்தில் அவன் என்ன செய்ய வேண்டும் என்று விளக்கப்பட்டது. அவன் கீழ்படிந்து தன் பாவங்கள் போக ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டான் (அப் 22:6)

சில ஆண்டுகளுக்குப்பிறகு, அவரே ஒரு சமயம் தன்னைப்பற்றி 'பாவிகளில் பிரதான பாவி நான்' என்று கூறி கர்த்தர் அவருடைய சரீரமாகியசபையைத்துன்புறுத்தினஎன்னையேமன்னிக்கமுடியும் என்றால் நிச்சயமாகவே உலகில் அவர் இரட்சிக்க முடியாத பாவி எவரும் இருக்க முடியாது என்றுஅடித்துச் சொல்லுகிறார்.' பாவிகளைஇரட்சிக்க கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார் என்கிற வார்த்தை உண்மையும் எல்லா அங்கீகரிப்புக்கும் பாத்திரமானது. அவர்களில் பிரதான பாவி நான்.

அப்படியிருந்தும் நித்திய ஜீவனை அடையும் படி இனிமேல் இயேசு கிறிஸ்துவினிடத்தில் விசுவாசமாய் இருப்பவர்களுக்கு திருஷ்டாநிதம் உண்டாகும் பொருட்டுப் பிரதான பாவியாகிய என்னிடத்தில் அவர் எல்லா நீடிய பொறுமையையும் காண்பிக்கும் படிக்கு இரக்கம் பெற்றேன் (I தீமோ 1:15, 16)

ஆகையால் நண்பனே! இயேசு மன்னிக்கமுடியாத அளவு பெரிய பாவம் செய்து விட்டதாக எண்ணிச் சோர்வடையாதே. நீ செய்ய வேண்டியதெல்லாம் கர்த்தர் பக்கமாகத் திரும்பி உன் பாவங்களுக்காக மெய் கனஸ்தாபம் பட்டு அவருடைய உபதேசச் சட்டத்துக்குக் கீழ்படிந்தால் போதும். அவர் உன்னை மன்னித்து உன்வாழ்க்கையில் காணப்-

படும் எல்லா பாவங்களையும் அகற்றி விடுவார். இதை நீ விசுவாசியாமலும் உன் பாவத்தை விட்டுவிட விருப்பம்இல்லாமலும் இருப்பாயானால் மட்டுமே நரகத்தில் தள்ளப்படுவாய்.

இன்னும் சிலர் இருக்கிறார்கள். அவர்களுக்கு சத்தியம் தெரியும். கீழ்படிதலின் அவசியமும் விளங்கும். ஆனால் ஏதாவது காரணத்தைச் சொல்லிக் கொண்டு காலம் தாழ்த்திக் கொண்டிருப்பார்கள். அப்படிப் பட்ட நபர்களில் நீங்களும் ஒருவரா? அப்படியிருந்தால் தயவு செய்து இரட்சிப்பின் முக்கியத்துவத்தை உணராமல் அசட்டையாய் இருக்க வேண்டாம் என்று உங்களை வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன். நீங்கள் அவருடைய உபதேசச் சட்டத்துக்குக் கீழ்ப்படியாதவனாயில் அவர் உங்களை இரட்சிக்க முடியாது. செய்ய வேண்டும் என்று தெரிந்த ஒரு விஷயத்தை ஒத்திப் போட்டுக் கொண்டே போவது எவ்வளவு அபாயகரமானது! சத்தியம் இன்னது என்று தெரியாத ஒரு பாவிக்கும், நான் ஒன்றும் பாவம் செய்யவில்லை, நான் நன்றாகத்தான் இருக்கிறேன் என்று கூறும் சுயதிருப்திக்காரனுக்கும் என்ன சம்பவிக்குமோ அது தான் உங்களுக்கும் சம்பவிக்கு என்பதும்எவ்வளவு பயங்கரம்! வேண்டாம், தயவு செய்து உங்கள் இரட்சிப்பைத் தள்ளிப் போடவே வேண்டாம். ஐயோ! உங்களுக்குக் கொடுக்கப் பட்டிருக்கிற இந்தக் கிருபையின் காலத்தை அலட்சியம் செய்யாதீர்கள். அப் 8ஆம் அதிகாரத்தில் வரும் அந்த எத்தியோப்பிய மந்திரியை நினைத்துக் கொள்ளுங்கள். தேவ சித்தத்தை அறிந்தபிறகு 'நான் ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளத் தடையென்ன?' என்று கேட்டானே (வ 36) அவனைப்போல நீங்களும் கீழ்ப்படிந்தால் அவனைப் போலவே நீங்களும் சந்தோஷத்தோடே எஞ்சியுள்ள உங்கள் வாழ்க்கையை நடத்திச் சென்று இறுதியில் நித்திய ஜீவனே அடையலாம். (வ 39)

ஒருவன் கர்த்தருடைய சித்தத்தை அறிந்து கொண்ட பிறகு அவன் அதற்குக் கீழ்ப்படிய முடியாத நியாயமான தடை எதுவும் இருக்க முடியாது. ஆகவே தயவு செய்து இன்றே செயல் படுங்கள். கிறிஸ்து உங்களை வாருங்கள், வந்து என்னிடத்தில் கற்றுக் கொள்ளுங்கள் என்று பட்சமாய் அழைக்கிறார். (மத் 11:28, 30)

நீங்கள் விசுவாசித்து ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டால் இரட்சிக்கப் படுவீர்கள். (மார்க் 16:16) 'நானே வழியும் சத்தியமும், ஜீவனுமாக இருக்கிறேன். என்னையன்றி ஒருவனும் பிதாவினிடத்திற்கு வர முடியாது' (யோவான் 14:6) என்ற இயேசு சொன்னதை நினைவில் வைத்து ஓடி வாருங்கள்.

**J. C. சோட்**

# கிறிஸ்தவ வாழ்க்கை

சகல வல்லமை உள்ளவரும், சகலரையும் நேசிப்பவருமாகிய உண்மையுள்ள ஒரே தேவன் பரிசுத்தராக இருக்கிறார். அவர் நல்லவர்; சகல காரியங்களிலும் பரிசுத்தமானவர். மனிடராகிய நாம் அவருக்குப் பிரியமானவர்களாயும் அவரைப் பின்பற்றுபவர்களாயும் இருக்க விரும்பினால் நாமும் அவரைப்போல் பரிசுத்தராக வாழ முயற்சி செய்யவேண்டும். (1 பேதுரு 1: 14, 16). அதாவது தேவனையும் கிறிஸ்துவையும் உண்மையாய்ப் பின்பற்றி கெட்டவைகளை அரவணைக்கும் மக்களிடமிருந்தும், அவர்கள் செய்கைகளிலிருந்தும் விலகிப் பரிசுத்தமாக வாழ வேண்டும். (1 தெச 5:22)

## மதுபானம் என்னும் பாவம்

போதையூட்டும் மதுபானங்களை ஒரு கிறிஸ்தவன் அருந்துவது தவறல்ல என பலர் எண்ணுகின்றனர். ஆனால் மதுபானம் அருந்துவதையும் அதன் தொடர்பான எல்லாவற்றையும் வேதாகமம் வன்மையாகக் கண்டிக்கிறது. குடிகாரன் சபைக்குப் புறம்பே தள்ளப்பட்டவன் (1 கொரி 5:11). அவன் மோட்சம் செல்ல அனுமதிக்கப்படமாட்டான் (1 கொரி 6:10). மதுபான வெறி மாம்சத்தின் கிரியை (பாவம்) களில் ஒன்று எனக் குறிக்கப்பட்டுள்ளது (கலா 5:21)

இயேசு திராட்சைரசம் அருந்தினார் எனவே நாமும் மதுபானம் அருந்தினால் தவறே இல்லை என சிலர் வாதாடுகின்றனர். ஆனால் அன்று கானாவூர் கலியாணத்திலே இயேசு அற்புதமாக உருவாக்கியதும் சகலரும் அருந்தியதுமான திராட்சை ரசம் இன்று ஒயின் என்று நாம் அழைக்கும் போதையூட்டும் பானத்திலிருந்து முற்றிலும் மாறுபட்டதாகும். புதிய ஏற்பாட்டு சகாப்தத்தில் பழைய, புதிய துருத்திகளில் பதப்படுத்தப்பட்ட சாதாரண திராட்சை ரசத்தையே ஒயின் என அழைத்தனர். (மத்தேயு 9:17) குளிர்பதன வசதியற்ற காரணத்தால் இயற்கை முறையில் துருத்திகளில் ஊற்றப்பட்டு திராட்சை ரசம் பதப்படுத்தப் பட்டது. எனவே இயேசு அக்கலியாணத்தில் உண்டாக்கியது வெறும் திராட்சைப் பழச்சாறே. இன்று கடைகளில் விற்கும் ஒயின் என்பது போதையூட்டும் பொருட்கள் கலந்த திராட்சை ரசம். இதை அருந்தும்போது போதை ஏற்படுவதால் தேவனின் சட்டம் மீறப்படுகிறது. (நீதிமொழி 23 29,35) வெறி ஏற்படாத அளவுக்கு மிதமாக அருந்துவது குற்றமாகாது என்பர் சிலர். கொஞ்சமோ, அதிகமோ, ஒருவன் எவ்வளவு குடித்தாலும் அந்த அளவிற்கு அவன் குடிகாரன் தானே? தன்னுடைய பரிசுத்தமான வாழ்க்கையால் தேவனை மகிமைப்படுத்த விரும்பும் ஒரு உண்மைக்

கிறிஸ்தவன் கெட்ட காரியங்களின் தோற்றத்தைக் கண்டே விலகிப் போய் விடுவான். எனவே போதையூட்டும் மதுவையும் அவன் விலக்கத் தானே செய்வான்?

## பொய் என்னும் பாவம்

'யாருக்காவது தீங்கு விளைவித்தால்தானே குற்றம்? எவரையும் பாதிக்காத அல்லது எவருக்கும் தீங்கு விளைவிக்காத ஒரு பொய் சொன்னால் என்ன? அது குற்றமா?' என பலர் இன்று கேட்கின்றனர். ஆனால் எந்த சந்தர்ப்பத்திலும் உண்மை மட்டுமே பேச வேண்டும் என கிறிஸ்தவர்களுக்கு அறிவுரை வழங்கினார் அப்போஸ்தலர் பவுல். (எபே 4:25) தனது பாவங்களுக்காக உண்மையாகவே மனஸ்தாபப்பட்டு பாவ வாழ்க்கையை புறக்கணித்த ஒரு கிறிஸ்தவன் ஒரு போதும் பொய் பேசவும் கூடாது என்றும் எழுதுகிறார் (கொலோ 3:9) வெளிப்படுத்திய விசேஷத்திலே (21:8) பொய்யர்கள் யாவரும் நரகத்திற்கு அனுப்பப்படுவர் என்று காண்கிறோம். சந்தர்ப்பத்தில் பேசப்படும் பொய்யானாலும், 'சிறு ஆபத்தற்ற பொய்யானாலும் மேலே குறிப்பிட்ட எச்சரிக்கைகளுக்குள் அடக்கமே. ஒரு உத்தியோகம், பள்ளியில் ஒரு இடச் சேர்க்கை போன்ற காரியங்களுக்காக ஒரு பொய் பேசினால் அது குற்றமாகி விடாது. ஒரு நல்ல காரியத்திற்காகத்தானே அது பயன்பட்டது என தங்கள் பொய்யை நியாயப்படுத்தும் பலரை நாம் அடிக்கடி சந்திக்கிறோம். ஆனால் தேவனால் அச் செயல் (பொய் பேசுதல்) குறிப்பாகக் கண்டிக்கப் பட்டிருக்கும் போது அச் செயலின் நல்ல விளைவை நியாயப் படுத்துவது தவறு. எந் நிலையில் பொய் பேசப்பட்டாலும் தேவனின் சமூகத்தில் அது பாவமே. கிறிஸ்துவின் இரத்தத்தால் அது மன்னிக்கப் பட்டாலொழிய பாவத்திற்கு தண்டனை உண்டு. தேவனை பிரியப்படுத்த உண்மைக் கிறிஸ்தவர்கள் ஒரு போதும் பொய் பேசலாகாது.

## ஆபாசப் பேச்சு என்ற பாவம்

பலர் தங்கள் உரையாடல்களில் கெட்டவார்த்தைகளையும் ஆபாசப் பேச்சுகளையும் அடிக்கடி பயன்படுத்துகின்றனர். நாவினால் உருவாகும் பல பாவங்களைப் பற்றி வேதாகமம் பேசுகிறது. சாபமிடுதல் ஒரு பாவம் (யாக்கோபு 3: 9, 10). சத்தியம் செய்தலும் தேவனுடைய நாமத்தை வீணாக இழுப்பதும் பாவமே. (யாத்திராகமம் 20:7, மத்தேயு 5:33, 37). கெட்ட செயல்கள் பற்றி பேசுவதும், ஆபாச சிலேடைப் பேச்சும் ஒரு உண்மைக் கிறிஸ்தவனின் பேச்சாகாது. 'உன் வார்த்தை-களினால் நீதிமான்என்றோ அல்லதுகுற்றவாளி என்றோதீர்க்கப்படுவாய் (மத்தேயு 12:37) என இயேசு கூறினார். தேவனுக்குப் பிரியமானவர்க-ளாகவும், கிறிஸ்துவைப் போல நடக்கவும் நமது பேச்சும் செயல்களும் பரிசுத்தமானவைகளாக இருக்க வேண்டும்.

## லஞ்சம் என்ற பாவம்

பொறுப்பிலுள்ள ஒரு நபரை நீதிக்குப் புறம்பாகச் செயல்பட வைக்க அல்லது குணக்கேடான செயலைச் செய்யக் கொடுக்கப்படும் அன்பளிப்புக்கு லஞ்சம் என்று பெயர். கிறிஸ்தவர் என சொல்லிக் கொண்டே பலர் இவ்வித செயலில் ஈடுபடுகின்றனர். போக்குவரத்து மீறல் குற்றத்தில் தண்டனை பெறாமல் தப்ப போலீசுக்கு லஞ்சம்; ஒரு வேலை கிடைக்க சிபாரிசு செய்ய லஞ்சம்; பள்ளியில் பிள்ளைகளைச் சேர்க்க தலைமையாசிரியருக்கு லஞ்சம்; (நன்கொடை என்ற பெயரால்) இவை யாவும் பொறுப்பிலுள்ளவர்களை தவறு செய்யத் தூண்டும் செயல்கள். எனவே சட்ட விரோதமும் ஆகும். ஒரு கிறிஸ்தவன் அரசு சட்டங்களுக்குக் கீழ்ப்படிய வேண்டும். (ரோமர் 13:1, 7). லஞ்சம் கொடுப்பவன் சட்டவிரோதச் செயலைச் செய்வதுடன் அக்கையூட்டைப் பெற்றுக் கொள்ளுப்பவனைப் போலவே குற்றவாளியுமாகிறான். கெட்டவைகளை வெறுத்து நல்லவற்றைப் பற்றிக் கொள்ளுவது ஒரு கிறிஸ்தவனின் கடமையாகும். (ரோமர் 12:9). எனவே உண்மைக் கிறிஸ்தவன் ஒரு போதும் லஞ்சம் கொடுக்கும் அல்லது வாங்கும் பாவத்தைச் செய்யக் கூடாது.

ஒரு உண்மைக் கிறிஸ்தவன் செய்யக்கூடாத பாவங்கள் இன்னும் பல உண்டு. வேசித்தனம், பொறாமை, சுயநலம், விக்கிரக ஆராதனை என்று எத்தனையோ உண்டு. (கலாத் 5:19, 21) (வெளி 21:8; கொலோ 3:5, 10) ஆனால் ஒரு உண்மைக் கிறிஸ்தவன், தேவன் கண்டிக்கும் பாவங்களை விலக்குவதோடு மட்டுமல்ல, அவருடைய கட்டளைகள் அனைத்துக்கும் கீழ்ப்படிந்தும் நடக்க வேண்டும். ‘நீங்கள் என்னிடத்தில் அன்பாயிருந்தால் என் கற்பனைகளை கைக்கொள்ளுங்கள்’ (யோவான் 14:15) என இயேசு கிறிஸ்து கூறினார். கிறிஸ்துவின் இரத்தத்தால் நமது பாவங்கள் கழுவப்பட நம்மை நாமே ஒப்புக் கொடுத்து புதிய ஏற்பாட்டில் குறிப்பிடப்பட்ட தேவனுடைய இரட்சிப்பின் திட்டத்தின்படி நடக்க வேண்டும்.

நீங்கள் இந்த இரட்சிப்பின் திட்டத்தைப்பற்றித் தெளிவாகத் தெரிந்து கொள்ள விரும்பினால் தங்கள் அருகாமையிலுள்ள **கிறிஸ்துவின் சபையாரை** தயவு செய்து அணுக வேண்டுகிறோம். மனிதனால் உருவாக்கப்பட்ட சபை பிரிவுகளையும் போதனைகளையும் விடுத்து வேதாகமத்தை மட்டுமே பின்பற்றி இயேசு கிறிஸ்து கட்டிய ஒரே சபையை மீண்டுமாக நிலைநாட்டும் பணியில் ஈடுபட்டுள்ளவர்களே கிறிஸ்துவின் சபையராகும் கிறிஸ்துவின் இரத்தத்தால் நமது பாவங்கள் மன்னிக்கப்பட, மனிதன் உருவாக்கிய போதனைகளுக்கல்ல, தேவனுடைய உபதேச சட்டங்களுக்கு மட்டுமே நாம் கீழ்ப்படிய வேண்டும். வேதாகமத்தை மட்டுமே நாம் பின்பற்றுவோம்; கிறிஸ்து கட்டிய சபைக்குத் திரும்புவோம்; அதுவே இரட்சிப்பின் வழி. அதுவே அங்கீகரிக்கப்பட்ட கிறிஸ்துவின் சரீரம். அதன் உபதேசங்களே கிறிஸ்தவ வாழ்க்கை நெறி.

தமிழில் S. S. **ராஜன்** மார்க் **ஆர். ஹிப்பர்**

# தெரிந்து கொள்ளுங்கள்

## ஆசரிப்புக் கூடாரம்

நாடோடிகளாகச் சுற்றித் திரிந்த இஸ்ரவேல் என்று பெயர் கொண்ட யாக்கோபின் மக்கள் தேவ எத்தனத்தாலும் அவர்களால் அடிமையாக விற்கப்பட்டாலும் தேவனுடைய அளவில்லாத இரக்கத்தினால் எகிப்து நாட்டின் ஆளுநராக உயர்த்தப்பட்ட அவர்கள் சகோதரன் யோசேப்பின் உதவியினாலும் எகிப்தின் செழுமையான பகுதியாகிய கோசேன் என்னும் சமவெளியில் வாழ்ந்து, பெருகி, எகிப்தியர்களே பார்த்து அஞ்சும்படியாக வலிமை மிக்க மக்கள் கூட்டமாக மாறி விட்டிருந்தனர்.

யோசேப்பின் மரணத்துக்குப் பிறகு சிம்மாசனம் ஏறிய எகிப்திய அரசர்கள் பஞ்சம் பிழைக்க வந்த எபிரேயருடைய வளர்ச்சியைக் கண்டு பொறாமையும், பயமும் கொண்டதால் அவர்களை அடிமைகளாக்கிக் கொடுமைப் படுத்தினர். இப்புதிய சூழ்நிலையால் பாதிக்கப்பட்ட மக்கள், வேதனை தாங்க முடியாமல் தேவனை நோக்கி கூக்குரல் இட்டனர். அவர்களுடைய பரிதாப நிலையைப் பார்த்து தேவன் மனம் இரங்கி மோசே என்னும் தம்முடைய தாசன் மூலமாக கி. மு. 1513ஆம் ஆண்டு வாக்கில் அவர்களை விடுதலையாக்கி தாம் ஆபிரகாமுக்கு கொடுப்பேன் என்று வாக்குக் கொடுத்த கானான் தேசத்துக்கு வனாந்தர மார்க்கமாக வழி நடத்தினார்.

எகிப்தைவிட்டு வெளியேறும்போது அவர்களுடைய எண்ணிக்கை, ஆறு இலட்சம் ஆண்கள் (யாத் 12:37). இதில், பெண்களும் குழந்தைகளும் சேர்க்கப்படவில்லை. அவர்களையும் சேர்த்தால், சுமார் முப்பது இலட்சம் மக்களாவது இருந்திருப்பார்கள்!

இந்த மக்களை நல்வழிப்படுத்தவும்; சமுதாயத்தில் அமைதியும் சமாதான சகவாழ்வு வாழ வகை செய்யவும் சில அமைப்பு முறைகள் தேவைப்பட்டன. ஆகவே தேவன் அவர்களுக்கு மோசேயின் மூலமாக பத்துக்கட்டளைகளையும், வாழ்க்கையின் பல்வேறு அம்சங்களுக்கும் பொருந்தக் கூடிய சட்டதிட்டங்களையும் வகுத்துக் கொடுத்தார். அது மாத்திரமல்ல, தேவனுக்கும், அவரால் தெரிந்து கொள்ளப்பட்ட மக்களாகிய இஸ்ரவேலருக்குமிடையே தொடர்பு நீடிக்கவும், ஆபத்துக் காலங்களில் காப்பாற்றவும், வழிநடத்தவும், நல்வாழ்வு அருளவும் விரும்பி, அவர்கள் மத்தியிலே வாசமாயிருக்க சித்தம் கொண்டு, தமக்-

கென்று ஒரு கூடாரத்தை (வாசஸ்தலத்தை) அமைக்கும்படி, மோசேயுக்கு மிகத் தெளிவான முறையில் கட்டளையிட்டார். (யாத் 25:9, 40) அந்தக் கூடாரத்தை வேதாகமம் பல பெயர்களால் குறிப்பிடுகிறது.

அவையாவன :-

1. ஆசரிப்புக் கூடாரம் (யாத் 29:42)
2. கர்த்தருடைய கூடாரம் (1 இராஜா 2:28)
3. கர்த்தருடைய ஆலயமாகிய வாசஸ்தலம் (1 நாளா 9:23)
4. கர்த்தருடைய ஆலயம் (யாத் 23:19)
5. ஆசரிப்புக் கூடார வாசஸ்தலம் (1 நாளா 6:32)
6. ஆசரிப்புக் கூடார வாசலாகிய கர்த்தருடைய வாசஸ்தலம் (லேவி 17:3)
7. ஆசரிப்புக் கூடாரமாகிய வாசஸ்தலம் (யாத் 39:32)
8. தேவனுடைய ஆலயமாகிய வாசஸ்தலம் (1 நாளா 6:48)
9. சாட்சியின் கூடாரமாகிய வாசஸ்தலம் (எண் 9:15)
10. சாட்சியின் வாசஸ்தலம் (யாத் 38:21)
11. பரிசுத்த ஸ்தலம் (யாத் 25:8)

மேலும் இரண்டு வகையான ஆசரிப்புக் கூடாரங்களைப்பற்றி வேதம் கூறுகிறது. முதற் கூடாரத்தில் லேவிக் கோத்திரத்தானல்லாத யோசுவா பணிவிடை செய்தான். இது, பாளயத்துக்கு புறம்பே மோசேயால் ஏற்படுத்தப்பட்ட ஆசரிப்புக் கூடாரம் (யாத் 33:7) இதைப்பற்றி நமக்கு அதிக விபரங்கள் வெளிப்படுத்தப்படவில்லை. இரண்டாவது ஆசரிப்புக் கூடாரம், யெகோவாவாகிய தேவனே விரும்பினது. அது எவ்வாறு செய்யப்பட வேண்டுமென்று. அதன் மாதிரியை மோசேயுக்கு விளக்கமாக காண்பித்து அதிலுள்ள விபரங்களின்படி செய்யும்படி எச்சரித்திருந்தார். (யாத் 25:9, 40; யாத் 25:1 to 27:21; 30:1 to 31:18; 35:1 to 40:38) ஆகவே, விசித்திர வேலைகளை யோசித்து செய்யும் ஞானத்தையும், புத்தியையும், அறிவையும் தேவனிடத்தில் பெற்ற பெசலேயேல் என்பவனை மோசே, இந்தஆசரிப்புக் கூடாரத்தின் கட்டுமானப் பணிக்கென்று தெரிந்து கொண்டார். அவன் யூதா கோத்திரத்தானாகிய ஊரியின் குமாரன். அவனுக்கு துணையாக தாண் கோத்திரத்தைச் சேர்ந்த அகிசாமாகின் குமாரனாகிய அகோலியாப் என்பவன் இருந்தான்.

இக்கூடாரம், 30 முழ நீளம், 10 முழ அகலம், 10 முழ உயரமுள்ளதாய் கிழக்கு நோக்கி இருக்கும்படி செய்யப்பட்டது. கொக்கிகளுக்கு இடையில் இணைக்கப்பட்ட, விசித்திர தையல் வேலையுள்ள, சணல் நூலினால் நெய்த, பத்து மூடு திரைகளினால் இந்த கூடாரம் மறைக்கப் பட்டிருந்தது. இந்த அழகான சணல் நூல் கெட்டுப் போகாதபடி காக்கப்படுவதற்காக, மூன்று மூடிகள் உண்டாக்கப்பட்டன.

(1. ஆட்டு மயிரினால் நெய்த பதினொரு மூடு திரைகள் யாத் 25:7)
2, ஆட்டுக்கடாத் தோலினால் செய்த மூடி - யாத் .6:14
3. தகசுத் தோலினால் செய்த மூடி-யாத் 26:14)

கூடாரம் நிமிர்ந்து நிற்கவும், மேலே குறிப்பிட்டுள்ள மூடிகளின் பளுவைத் தாங்கவும் தக்கதாக, சீத்தீம் மரத்தினால் செய்யப் பட்ட நாற்பத்தியெட்டு 'சார மரங்கள்' நட்டிருந்தார்கள் (யாத் 26:15-23). இந்த சார மரங்கள் பொன் தகட்டால் மூடப்பட்டிருந்தன. இவைகள் ஆடாமல் அசையாமல் இருக்க, மூன்று வரிசையில் தாழ்ப்பாள் கம்பிகள் மாட்டப்பட்டிருந்தன, (யாத் 26:26) கீழ்ப்பாகத்தில் இப்பலகைகளைப் பொருத்தி, நிற்க வைக்க, வெள்ளியினால் செய்யப்பட்ட பாதங்கள் (Sockets) அமைக்கப்பட்டிருந்தன. அவைகளில் இந்த சார மரங்கள் நிறுத்தப்பட்டு அவைகளின்மேல், சணல் நூல் மூடுதிரைகள் தொங்க விடப் பட்டிருக்கும். பின்பக்கத்திலும், பக்கவாட்டிலும் இக்கூடாரம் மூடப்பட்டிருந்தது; முன் பக்கம் மாத்திரம் திறந்திருந்தது. இதை மூடி திறக்க ஐந்து தூண்கள் நிறுத்தப்பட்டு, தொங்கு திரைகள் போடப் பட்டிருந்தன.

இக்கூடாரத்தை உருவாக்குவதற்கு உபயோகிக்கப் பட்ட பொன், வெள்ளி ஆகியவைகளின் இன்றைய மதிப்பு சுமார் ரூ. இருபது கோடி இருக்கலாம் என கணக்கிடுகின்றனர். இந்த வெள்ளியும், பொன்னும் எகிப்து தேசத்திலிருந்து புறப்பட்டு வந்த சமயத்தில் அந்நாட்டு மக்களிடமிருந்து 'இரவல்' என்ற பெயரால் அடித்த கொள்ளைகள்! (யாத் 12:35)

இந்த 30 முழ நீளக் கூடாரம், விசித்திர வேலைப்பாடுகள் அமைந்த ஒரு திரைச் சீலையினால் இரண்டாகப் பிரிக்கப்பட்டிருந்தது. மேற்கி-லிருந்து 10 முழம், அதாவது பின் பக்க 10முழம் மகா பரிசுத்த ஸ்தலம் என்றும், அழைக்கப்பட்டது. மகாபரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரதான ஆசாரியன் மட்டுமே ஆண்டுக்கு ஒரு முறை, பாவ நிவாரண நாளில் உட்பிரவேசிக்கலாம். மற்ற எவருக்கும் அதனுள் பிரவேசிக்க அனுமதியில்லை.

## மகா பரிசுத்த ஸ்தலத்தில் இருந்தவை

**உடன்படிக்கை பெட்டி**:- சீத்தீம் மரத்தினால் செய்யப்பட்டு, பொன் தகட்டால் மூடப்பட்டிருந்தது. இதன் நீளம் $2\frac{1}{2}$ முழம், அகலம் 1 முழம், உயரம் 1 முழம். இதற்குள் பத்துக் கட்டளைகள் எழுதப்பட்ட இரண்டு கற்பலகைகள், மன்னா வைக்கப்பட்டிருந்த பொன் பாத்திரம், ஆரோன் உபயோகித்து வந்த " தளிர்ந்த கோல் " ஆகியவைகள் வைக்கப்பட்டி ருந்தன. இந்தப் பெட்டிக்கு மூடியாக பொன்னால் அடிக்கப்பட்ட கிரு

பாசனமும், அதன்மீது ஒன்றையொன்று பார்க்கும் விதத்தில், எதிர் எதிரே உட்கார்ந்து, தங்கள் செட்டைகளை விரித்து, கிருபாசனத்தை நிழலிடும்படியாக இரண்டு கேருபீன்கள் வைக்கப்பட்டிருந்தன. இவைகள் யாவும் பசும் பொன்னால் செய்யப்பட்டவைகள். மேலும் ஒரு பொன் தூபகலசமும் மகா பரிசுத்த ஸ்தலத்தில் இருந்ததாகத் தெரிகிறது. ( எபி 9:3,4 )

## பரிசுத்த ஸ்தலத்தில் இருந்த பொருட்கள்

1. **தேவ சமுகத்து அப்ப மேசை ஒன்று :-** சீத்தம் மரத்தால் செய்யப்பட்டு, பசும் பொன்னினால் மூடப்பட்டிருக்கும். இதன் நீளம் 2 முழம், அகலம் 1 முழம், உயரம் 1 முழம். இதன் மீது பன்னிரண்டு அப்பங்கள் வைக்கப்பட்டிருக்கும். ஒவ்வொரு ஓய்வுநாளிலும் இவைகள் மாற்றப்பட்டு புதிய அப்பங்கள் வைக்கப்படும். இம்மேசைமீது தட்டுகளும் தூப கரண்டிகளும் கூட வைக்கப்பட்டிருக்கும்.

2. **குத்து விளக்கு :-** பசும் பொன்னால் செய்யப்பட்ட இவ்விளக்கின் நடுவில் ஒரு தண்டும், இருபக்கங்களில் மும்மூன்றாக ஆறு தண்டுகளும் காணப்படும். அவற்றின் முனைகளில் மொத்தம் ஏழு அகல்கள் காணப்படும். இதன் அருகில், கத்திரிகளும் சாம்பல் பாத்திரங்களும் கூட வைக்கப்பட்டிருக்கும்.

3. **தூப பீடம் :-** இது, ஒரு முழ நீளம், ஒரு முழ அகலம், 2முழ உயரமுள்ளது. இதனுடைய கொம்புகள் அதனோடே இணைந்திருக்கும் வண்ணம், ஏக வேலைபாடாக செய்யப்பட்டு வெண்கலத் தகட்டால் மூடப்பட்டிருந்தது.

கூடாரத்தைச் சுற்றி ஒரு பிரகாரம் (Court) அமைக்கப் பட்டிருந்தது. இது கிழ மேற்கில் 100முழம், தென்வடக்கில் 50 முழம் கிழக்கு பக்கத்தில் தொங்கும் திரையொன்று இருந்தது, மற்ற மூன்று பக்கங்களும் வெண்கலப் பாதங்களில் நாட்டப்பட்டிருந்த தூண்களிலிருந்த சணல்நூல் திரைச் சீலையினால் மறைக்கப்பட்டிருக்கும்.

## பிரகாரத்தில் இருந்த பொருட்கள்

1. **தகன பலிபீடம் :-** இது வெண்கல பலிபீடம் என்றும்அழைக்கப்படும். இதற்கு நான்கு கொம்புகள் இருந்தன. இதன் கீழ்ப்பாகத்தை மூடும்படி, சுற்றிவரச் சல்லடை கட்டப்பட்டிருந்து.

2. **வெண்கலத் தொட்டி:-** ஆசாரியர்கள், தங்கள் ஊழியத்தை நிறைவேற்ற பரிசுத்த ஸ்தலத்துக்குள் நுழையும்போது தங்களைச்சுத்திகரித்துக் கொள்வதற்கு வசதியாக இத் தொட்டியில் தண்ணீர் நிரப்பப்பட்டிருந்தது.

# ஆயிரம் வருட அரசாட்சியா! அது என்ன?

சமீப காலத்தில் கிறிஸ்தவ உலகில் ஒரு நூதனக் கொள்கை பிரபலமடைந்து வருகிறது. அதைப் பற்றிப் பிரசங்கிக்காத பிரசங்கிமார்கள் மிகச் சொற்பம். அந்த கொள்கை பற்றி வேதாகமம் என்ன போதிக்கிறது என்பதை சற்றே ஆராய்ந்து பார்ப்போம். 'ஆயிரம் வருட அரசாட்சி' என்ற உபதேசம் இயேசுவின் இரண்டாம் வருகையோடு சம்பந்தப்படுத்தப் பட்டிருக்கும் ஒரு துணை 'கப்ஸா'. அதன்படி இயேசு கிறிஸ்து இந்த பூமிக்கு மீண்டும் வந்து இராஜ்ஜியம் அமைத்து ஆயிரம் வருடம் தம்முடைய பரிசுத்தவான்களோடு அரசாட்சி செய்வார் என்ப

---

4-ம் பக்கத் தொடர்ச்சி

ஆத்துமாவை அடகு வைப்பதற்கு நாம் வெட்கப்படுவதேயில்லை. அப்படிப்பட்டவர்களைப் பார்த்து ''மதிகேடனே!'' என்று வேதம் விளிக்கிறது. (லூக் 12:20). மேலும் இயேசு இப்படிப்பட்டவர்களை நோக்கி ஒரு கேள்வி கேட்கிறார். ''மனுஷன் உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்திக் கொண்டாலும் தன் ஜீவனை நஷ்டப்படுத்திக் கொண்டால் அவனுக்கு லாபம் என்ன? தன் ஜீவனுக்கு ஈடாக அவன் என்னத்தைக் கொடுப்பான்? (மத் 16:26)

மேற்சொன்ன காரியங்கள் அனைத்தையும் சிந்தித்துப் பார்க்கும் போது, மனிதன் தன்னைப் படைத்த கடவுளை மறந்து, புறக்கணித்து விட்டு, தன் சொந்த வழி நடந்து நிம்மதியையும், சமாதானத்தையும், மகிழ்ச்சியையும் அடையவும், நித்திய ஜீவனைப் பெறவும் இயலாது. படைத்தவரை மதித்துக் கனம் பண்ணி, அவர் வகுத்துத் தந்துள்ள பிரமாணங்களைப் பற்றிக் கொண்டு அதன்படி வாழ்ந்து வந்தால், இம்மையில் சமாதானமும், மகிழ்ச்சியும் கிட்டும். மறுமையிலும் கிறிஸ்துவோடு ஆளுகை செய்யும் பாக்கியமும், என்றென்றும் கவலையில்லாத, துன்பம் கலவாத மகிழ்ச்சியான வாழ்வும் வாழலாம் என்ற உண்மை தெளிவாகிறது.

நண்பனே, சகோதரியே! இப்பொழுது நம்முடைய தீர்மானம் என்ன? கிறிஸ்துவை நம்முடைய வாழ்க்கையின் வழிகாட்டியாக ஏற்றுக் கொண்டு அவருடைய உபதேசச் சட்டங்களுக்கு முழு மனதுடன் கீழ்ப்படிந்து, நீதியாகவும், நேர்மையாகவும், பண்புடனும், அன்புடனும் விசுவாசத்துடனும் வாழ்ந்து அவர் நமக்காக வைத்திருக்கும் ஆனந்த பாக்கியத்தைப் பெற்றுக் கொள்ள இன்றே உறுதி எடுத்துக் கொள்ள தேவன் நம்மை ஏவுவாராக!

— E. Z. செல்வநாயகம்

தாகும். ஆனால் வேதாகமம் இயேசுவுக்கு ஏற்கனவே ஓர் இராஜ்ஜியம் உண்டு என்றும் அதை அவருடைய பரிசுத்தவான்களோடு அரசாட்சி செய்து கொண்டிருக்கிறார் என்றும் கூறுகிறது. இந்த முரண்பாட்டைப் பற்றி நாம் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. தேவனுடைய வார்த்தைகளைத் தவறாக மக்கள் புரிந்து கொள்ளும்படி அவர்களுடைய கருத்துக் கண்களை சாத்தான் குருடாக்கிப் போடுகிறான். (2 கொரி 4:4)

இராஜ்ஜியத்தைப் பற்றிக் குறிப்பிடும் வசனப் பகுதிகள் அநேகமுண்டு. இஸ்ரவேல் மக்களுக்கு இராஜா, இராஜ்ஜியம் போன்ற முடியாட்சி முறை பழக்கமான ஒன்றே, பழைய ஏற்பாட்டின் பிற்பகுதியில் தீர்க்க தரிசனம் உரைத்தவர்கள் மேசியாவின் வருகையைப் பற்றியும் அவர் ஏற்படுத்தப் போகும் இராஜ்ஜியத்தைப் பற்றியும் அவர் அதில் இராஜாவாக ஆளுகை செய்வதைப் பற்றியும் சொல்லியிருக்கிறார்கள். கிறிஸ்து வருவதற்கு முன் சுமார் 700 ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த ஏசாயா என்னும் தீர்க்கன் மேசியா ஆளுநராக இருப்பார் என்றும் அவருடைய இராஜ்ஜியத்தில் சமாதானம் நிலை பெற்றிருக்கும் என்றும் வாக்குறுதி கொடுத்திருக்கிறார். ( ஏசாயா 9:6,7 )

புதிய ஏற்பாட்டின் ஆரம்ப காலத்தில் தீர்க்கதரிசியாக மதிக்கப்பட்ட யோவான் ஸ்நானகன் பரலோக இராஜ்ஜியம் சமீபித்து விட்டதாகப் பிரசங்கித்தார். (மத் 3;2) கர்த்தராகிய இயேசுவும் அதை உறுதி செய்தார். ( மாற்கு 1:15 ) மத்தேயு அவரை யூதருடைய இராஜா என்று குறிப்பிடுகிறார். ( மத் 2:2 ) இயேசுவும் தேசாதிபதியாகிய பிலாத்துவிடம் தான் யூதருடைய இராஜா என்று ஒத்துக் கொண்டார். ( யோவான் 19:37 ) அத்துடன் அவர் நிறுத்திக் கொள்ளாமல், தன்னுடைய இராஜ்ஜியம் இவ்வுலகத்துக்குரியதல்ல என்றும் அது ஆவிக்குரிய இராஜ்ஜியம் என்றும் சொல்லத் தவறவில்லை. ( வ. 36) இயேசு தந்த இந்த மறுமொழியில் குறிப்பிடப்பட்டு இருக்கிற உண்மையை அடிப்படையாக வைத்துத் தான் இயேசுவின் இரண்டாம் வருகை, இராஜ்ஜிய ஸ்தாபிதம், ஆயிரவருட அரசாட்சி, பரிசுத்தவான்களின் பிரஜா உரிமை போன்றவைகள் நிர்ணயிக்கப் பட வேண்டும்.

**இராஜ்ஜியத்தின் அடையாளங்கள்.** இராஜ்ஜியம் என்றால் என்ன என்பதை முதலில் தெளிவு படுத்திக் கொண்டால், அதன் தொடர்பான மற்ற காரியங்களை எளிதில் புரிந்து கொள்ள முடியும். ஏற்கனவே யோவான் ஸ்நானகனும் இயேசு கிறிஸ்துவும் இராஜ்ஜியம் சமீபித்து விட்டது என்று போதித்தார்கள் என்று பார்த்தோம். வேறு ஒரு இடத்தில் இயேசு இங்கே நிற்கிறவர்களில் சிலர் தேவனுடைய இராஜ்ஜியம் பலத்தோடே வருவதைக் காணுமுன் மரணத்தை ருசி பார்ப்பதில்லை என்று சொல்லியிருக்கிறார். (மாற்கு 9:1) ஆகவே அந்தத் தலை முறையில் இராஜ்ஜியம் ஏதாவது ஒரு ரூபத்தில் வந்தாக வேண்டும்

என்பதை உறுதிப்படுத்துகிறது. மத் 16:18, 19 என்னும் வசனப் பகுதி ஒரே ஸ்தாபனத்தை சபையென்றும், இராஜ்ஜியம் என்றும் மாற்றி மாற்றிக் குறிப்பிடுகிறது. இயேசு தன் இராஜ்ஜியமாகிய சபையைக் கட்டி, அதன் திறவுகோலைப் பேதுருவிடம் கொடுப்பதாகக் கூறுகிறார். அதன்படி நாம் பேதுருவைப் பின் தொடர்ந்து வரும்போது அப் 2ஆம் அதிகாரத்தில் குறிப்பிட்டிருக்கிற பெந்தே கோஸ்தே நாளில் இயேசு கிறிஸ்து மரணத்தை வென்று உயிரோடு எழுந்தார் என்று பிரசங்கித்தார். அந்தச் செய்தியை ஏற்றுக் கொண்டு அவருடைய ஆலோசனைக்குக் கீழ்ப்படிந்த 3000 மக்கள் இரட்சிக்கப்பட்டு சபையில் சேர்த்துக் கொள்ளப் பட்டார்கள் என்று வாசிக்கிறோம். (அப் 2:36-47) அதே போன்று இராஜ்ஜியம் வரும் போது 'வல்லமை'யோடு வரும் என்ற சொல்லையும் பின் தொடர்வோம். 'இங்கே நிற்பவர்களில் சிலர்' இராஜ்ஜியம் வருவதற்கு முன் மரணத்தை ருசி பார்ப்பதில்லை என்று சொன்னதற்கு இசைவாக, இயேசு பரமேறுவதற்கு முன்பாக, அப்போஸ்தலரிடம் நீங்கள் உன்னதத்திலிருந்து வரும் பெலனால் தரிப்பிக்கப்படும் வரைக்கும் எருசலேம் நகரத்தில் இருங்கள் என்றார். (லூக் 24:49) லூக்கா இந்த வாக்குத் தத்தத்தை நினைவு படுத்தி அந்த வல்லமை பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் என்று அடையாளம் காட்டுகிறார். (அப் 1:4, 5, 8) அந்த வல்லமையால் நிரப்பப்பட்டுப் பெலன் அடைந்த பிறகு அவர்கள் எருசலேமிலும், யூதேயாவிலும் சமாரியாவிலும் சாட்சிகளாக இருப்பார்கள் என்று தெரிகிறது. பெந்தே கோஸ்தே நாளில் அந்த 'வல்லமை' வந்தது. (அப் 2: 1, 4) அந்த நாளில்தான் சபையும் ஸ்தாபிக்கப்பட்டது. (வ. 47) இராஜ்ஜியம் வல்லமையோடு வரும்; அந்த வல்லமையோடு கொடுக்கப்பட்ட செய்தியின் விளைவாக சபை உருவாகியது என்பதையும் கவனித்தால் இராஜ்ஜியம் என்பதும் சபையென்பதும் ஒரே ஸ்தாபனம் தான் என்று தெளிவாகிறது.

இந்த முடிவை உறுதிசெய்யும் வகையில் அப்போஸ்தலன் பவுல், எபேசு பட்டணத்தாருக்கு எழுதிய கடிதத்தில் 'ஒரே சரீரம்' என்று 4:4ஆம் வசனத்திலும் அந்த சரீரம் சபைதான் என்று 1:22, 23ஆம் வசனங்களிலும் குறிப்பிடுகிறார். மேலும் அப்போஸ்தலனாகிய பவுலும் கொலோசே பட்டணத்தில் இருந்த பரிசுத்தவான்களும் இராஜ்ஜியத்துக்குட் படுத்தப் பட்டிருப்பதாகக் குறிப்பிடுகிறார். (கொலோ 1:13) அதே போன்று அப்போஸ்தலன் யோவானும், வெளிப்படுத்தின விசேஷத்தில் இடம் பெற்றுள்ள ஏழு சபைகளின் அங்கத்தினர்களும் இராஜ்ஜியத்தில் இருந்தார்கள் என்று பார்க்கிறோம். (வெளி 1: 9; 2-ம், 3ஆம் அதிகாரம்) இவைகளை உற்றுக் கவனித்தால், ஒரே சரீரம்—அது தான் சபை. இயேசு கட்டுவேன் என்று வாக்குறுதி கொடுத்த அந்த சபை தான் இராஜ்ஜியம். அது சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு ஸ்தாபிக்கப்பட்டது (அப் 2) ஆயிரம் வருட அரசாட்சிக் காரர்கள்

கூறுகிறபடி, அந்த இராஜ்ஜியம் இனி வரப் போகிற ஒன்று அல்ல. அது ஏற்கனவே வந்து விட்டது. இராஜ்ஜியம் என்பது சபை என்றும், கர்த்தருடைய சரீரம் என்பது சபை என்றும் (கொலோ 1: 18; எபே 1: 22, 23) அது ஆவிக்குரிய ஸ்தாபனம் என்றும் தெளிவான பிறகு, இவர்கள் இராஜ்ஜியம் பூமிக்குரியது என்ற எண்ணத்தில் அதை எதிர் பார்த்துக் கொண்டிருப்பதில் பொருள் இல்லை.

ஆயிரம் வருட அரசாட்சிக் காரர்களின் கூற்றை கொஞ்சம் ஆய்ந்து பார்ப்போம்.

**1. பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசனங்கள் இன்னும் நிறைவேறவில்லை.** நியாயப் பிரமாணத்தையானாலும், தீர்க்கதரிசனங்களையானாலும் அழிக்கிறதற்கு வந்தேன் என்று எண்ணிக் கொள்ளாதேயுங்கள்; அழிக்கிறதற்கு அல்ல, நிறைவேற்றுகிறதற்கே வந்தேன் என்று இயேசு சொன்னார். (மத் 5: 17) அவரைக் குறித்துச் சொல்லப்பட்ட தீர்க்கதரிசனங்களை எப்படி நிறைவேற்றினாரோ அவ்விதமாகவே அவருடைய இராஜ்ஜியம் அல்லது சபையைப் பற்றிச் சொல்லப்பட்டிருக்கிற தீர்க்கதரிசனங்களையும் நிறைவேற்றினார். அவைகள் நிறைவேறினதற்கான தடயங்கள் நமக்குத் துல்லியமாக இல்லாவிட்டாலும், நிறைவேற்றினார் என்பதற்குச் சந்தேகமேயில்லை. சபை என்பது ஆவிக்குரிய ஸ்தாபனமாக இருக்கிறபடியால் ஆயிரம் வருட அரசாட்சிக் கொள்கைக்காரர்கள் எதிர்பார்ப்பது போல அது உலகத்தில் நாம் காணும் அளவில் நிறைவேற்றப்படவில்லை.

**2.** புதிய வானம் புதிய பூமி 2 பேதுரு 3: 13ல் கூறியுள்ளபடி, இந்தப் பிரபஞ்சத்தில் அது சம்பவிக்கும் என்று எதிர்பார்க்கிறார்கள். ஆனால் யோவான் 14: 2, 3 ஆகிய வசனங்களில் கர்த்தர் தம்முடையவர்களை பிதா ஆயத்தம் செய்து வைத்திருக்கும் மாளிகையில் கூட்டிச் சேர்ப்பேன் என்று கூறுகிறார். அப்போஸ்தலனாகிய பவுல் கூட ''பின்பு உயிரோடிருக்கிற நாமும் கர்த்தருக்கு எதிர் கொண்டு போக, மேகங்கள் மேல் அவரோடே கூட ஆகாயத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டு, இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தருடனே கூட இருப்போம்.'' என்று கூறுகிறார் (1 தெச 4;17) அப்போஸதலன் பேதுருவும் கூட உங்களுக்கு அந்த சுதந்தரம் பரலோகத்தில் வைக்கப் பட்டிருக்கிறது என்கிறார். (1 பேதுரு 1:4) மேலும் கர்த்தருடைய நாள் இரவிலே திருடன் வருகிற விதமாய் வரும்; அப்பொழுது வானங்கள் மட மட வென்று அகன்று போகும். பூதங்கள் வெந்து உருகிப்போம். பூமியும் அதிலுள்ள கிரியைகளும் வெந்து அழிந்து போகும்'' என்றும் கூறுகிறார் (2 பேது 3: 10). இவைகளின் வெளிச்சத்தில் நாம் பார்க்கும் போது கர்த்தரும் அவருடைய பரிசுத்தவான்களும் அவருடைய இரண்டாம் வருகைக்குப் பிறகு பூலோகத்தில் இருக்கமாட்டார்கள் என்று தெளிவாகிறது.

**வெளிப்படுத்தின விசேஷம் 20-ம் அதிகாரம்** இந்த அதிகாரம் தான் ஆயிரம் வருட அரசாட்சிக் கொள்கைக் காரர்களின் ஊற்றுக்கண். ஆனால் அந்தக் கொள்கைகள் கூறுகிற ஒன்றும் அதில் இல்லை என்பது கவனிக்கத் தக்கது. இந்தஅதிகாரத்தின் 4ஆம் வசனம் கூறுகிற 'அவர்கள் உயிர்த்துக் கிறிஸ்துவுடனே கூட ஆயிரம் வருடம் அரசாண்டார்கள்' என்ற வாக்கியத்தை ஆதாரமாகக் காட்டி, கர்த்தருக்குச் சொந்தமானவர்கள் ஆயிரம் ஆண்டுகள் பூமியில் அரசாட்சி செய்வார்கள் என்று கூறுவர். ஆனால் இந்த வசனத்தின்படி, யோவான் கண்டது அனைத்துப் பரிசுத்தவான்களையும் அல்ல; சிரச் சேதம் செய்யப் பட்ட தியாகிகளையும், இரத்தச் சாட்சிகளாக மரித்தவர்களையும் மட்டுமே. அவர்கள் உயிர்த்துக் கிறிஸ்துவுடனே கூட ஆயிரம் வருஷம் அரசாண்டார்கள். அதாவது கிறிஸ்தவ சகாப்தத்தில் அப்படிப்பட்ட தியாகிகள் இயேசுவோடு அரசாளும்படி உயர்த்தப்படுவார்கள் என்கிறது. இது தற்காலத்தில் வாழ்கிற நமக்கு ஆறுதல் அளிக்கக் கூடியதாக இருக்கிறது. நாமும் கூட ஒரு நாளைக்கு கர்த்தரரோடு இருப்போம் என்ற நம்பிக்கையைத் தருகிறது. இதில் எங்கும் பூமியில் அரசாட்சி செய்வார்கள் என்பதற்கான ஆதாரமே இல்லை. அவர்கள் கர்த்தரோடே இருந்தார்கள் என்றே கூறுகிறது.

**ஆயிரம் வருட அரசாட்சிக் கொள்கைக் காரர்கள் சபையின் முக்கியத் துவத்தைக் குலைக்கிறார்கள்** ஆயிரம் வருட அரசாட்சிக் கொள்கையின் படி தேவனுடைய ஒரிஜனல் திட்டத்தில் சபை இடம் பெறவில்லை. இயேசு கிறிஸ்து இராஜ்ஜியத்தை அமைக்கும் முயற்சி யூதர்களால் தடுக்கப்பட்டு விட்டபடியால் ஒரு தற்காலிக ஏற்பாடாக சபையைக் கட்டினார் என்று சொல்லுகிறார்கள். ஆனால் பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்ட அப்போஸ்தலன் பவுல் எபேசுப் பட்டணத்தாருக்கு எழுதிய நிருபத்தில் தேவனுடைய **அனாதித் தீர்மானத்தின் படி** அவருடைய அனந்த ஞானமானது சபையின் மூலமாய் இப்பொழுது தெரிய வரும் பொருட்டாக...' எபே (3:9,10) என்கிறார். இப்பொழுது நீங்களே சொல்லுங்கள் பரிசுத்த வேதாகமத்தை நம்புவதா? அல்லது ஆயிரம் வருட அரசாட்சிக் கொள்கையையா? ஏனெனில் இரண்டும் சரியாக இருக்க முடியாதே!

அது மட்டுமல்ல, இவர்கள் கூற்றுப்படி பார்த்தால், இயேசு கிறிஸ்து இப்பொழுது இராஜாவாக அரசாளவில்லை என்றாகிறது. இராஜ்ஜியமே இல்லை என்று சொல்லும் போது ஒருவர் இராஜாவாக இருப்பது எப்படி?

இராஜ்ஜியம் இன்னும் வரவில்லை. என்று கூறுவோமானால் அவர் இப்பொழுது இராஜவாக இல்லை என்று பொருள் படும். அப்படியானால் (1 கொரி 15:24-26) ஆகிய வசனங்கள் கூறுவதற்கு என்ன விளக்கம்?''

"அதன் பின்பு முடிவு உண்டாகும். அப்பொழுது அவர் சகல வல்லமையையும் பரிகரித்து, தேவனும் பிதாவுமாயிருக்கிறவருக்கு இராஜ்ஜியத்தை ஒப்புக் கொடுப்பார்.

எல்லாச் சத்துருக்களையும், தமது பாதத்திற்குக் கீழாக்கிப் போடும் வரைக்கும் அவர் ஆளுகை செய்ய வேண்டியது.

பரிகரிக்கப்படும் கடைசிச் சத்துரு மரணம் "
இங்கே அப்போஸ்தலன் பவுல் முடிவு காலத்தைப் பற்றிக்குறிப்பிடுகிறார். பிதாவுக்கு இராஜ்ஜியத்தை ஒப்புக் கொடுப்பார். (வ 24) அப்பொழுது ஸ்தாப்பிக்கிறதில்லை; ஒப்புக் கொடுப்பார். அப்படியானால் இரண்டாம் வருகைக்கு முன் அங்கே இராஜ்ஜியம் இருக்கிறது என்று ஆகிறது. தொடர்ந்து பவுல் எல்லா வகையான சத்துருக்களையும் பரிகரித்து, இறுதியாக மரணம் என்கிற சத்துருவையும் முறியடிப்பார் என்கிறார். கவனியுங்கள்! மரணம் இனிமேல் இல்லைஎன்ற நிலை வரையிலும் ஆளுவார். அதாவது மரணம் சம்பவித்துக்கொண்டிருக்கிறது என்றால் அவருடைய ஆளுகை இன்னும் இருக்கிறது என்று பொருள். இன்றும் மரணம் சம்பவித்துக் கொண்டிருக்கிறதை நாம் அறுதினமும் பார்க்கிறோம். அப்படியானால் இயேசு கிறிஸ்து அரசாண்டு கொண்டு இருக்கிறார். வேறே நிரூபணம் தேவையில்லை.

நண்பர்களே ! இதுவரை நாம் பார்த்தவர்களை சுருக்கமாய் பார்ப்போம். பழைய ஏற்பாடு இராஜா வருகிறார், இராஜ்ஜியம் வருகிறது என்று கூறுகிறது. புதிய ஏற்பாடு இயேசு கிறிஸ்து தம்முடைய இரத்தத்தைச் சிந்தி சபையைச் சம்பாதித்து தீர்க்க தரிசனங்களை நிறைவேற்றினார் என்று கூறுகிறது. சுவிசேஷத்துக்குக் கீழ்ப்படிந்து ஞானஸ் பெற்றுக் கொண்டால் கர்த்தர் சபையில் சேர்த்து கொள்கிறார். (அப் 2: 47) வேறு விதமாய்ச் சொல்ல வேண்டும் என்றால் தேவனுடைய இராஜ்ஜியத்தில் பிரவேசித்து அதன் குடிமகனாக மாறுகிறான். காரியங்கள் இப்படியிருக்கும் போது, உலகில் இராஜ்ஜியம் நிறுவி 1000 ஆண்டுகள் இயேசு அரசாளுவார் என்று வீணாய் மனிதர்கள் எதிர்பார்த்துக் கொண்டு அலைகின்றனர். கர்த்தர் மீண்டும் வரும் போது அவர் இராஜ்ஜியத்தை ஸ்தாபிக்கவல்ல, இராஜ்ஜியத்தைப் பிதாவிடம் ஒப்படைக்கவே வருகிறார்.

நீங்கள் அந்த இராஜ்ஜியத்தில் இல்லாமல் இருந்தால் எவ்வளவு பரிதாபம் ! ஆகவே நீங்கள் இதுவரை சுவிசேஷத்துக்கு கீழ்ப்படியாமல் இருந்தால் இன்றே அதைச் செய்ய உங்களுக்கு ஆலோசனை கூறுகிறேன் இப்பொழுதே இரட்சண்யகாலம்; இப்பொழுதே இரட்சணிய நாள் (2 கொரி 6:2)

**W.N. ஜேக்ஸன்**

# கர்த்தருடைய இராப்போஜனம்

## I. கர்த்தர் இராப்போஜனத்தின் தோற்றம்

A. கிறிஸ்துவினால் ஏற்படுத்தப்பட்டது (மத். 26:29-29, மாற். 14:22-25; லூக். 22:19-20)

B. தான் காட்டிக்கொடுக்கப்பட்ட அன்று ராத்திரி இதை ஏற்படுத்தினார். (1 கொரி 11:23-26)

## II. கர்த்தர் இராப்போஜனத்தின் வைக்கப்படும் பொருட்கள்

A. அப்பம் கிறிஸ்துவின் சரீரத்திற்கு அடையாளமாக இருக்கிறது. (மத், 26:26; மாற், 14:22; லூக். 22:19; 1 கொரி, 11:23-24)

B. திராட்சை ரசம் அவருடைய ரத்தத்திற்கு அடையாளமாக இருக்கிறது. (மத், 26:28; மாற். 14:24-25; லூக். 19:20 ; 1 கொ 11:25)

## III. கர்த்தர் இராப்போஜனத்தின் தோற்றம்

A. கர்த்தர் இராப்போஜனம் கிறிஸ்துவின் சரீரத்தோடும், ரத்தத்தோடும் கொள்ளும் ஐக்கியம் (1 கொரி 10:15-21) நாம் கர்த்தர் இராப்போஜனத்தை புசிக்கும் பொழுது, கல்வாரியில் செய்த கிறிஸ்துவின் பலியினால் ரட்சிக்கப்பட்டோம் என்ற உண்மையை வெளிப்படுத்துகிறோம். பாவத்திலிருந்து நம்மை ரட்சிக்கவல்ல அதோடு நாம் ஐக்கியப்பட்டிருக்கிறோம்.

B. கர்த்தர் விருந்து சிலுவையில் கிறிஸ்துவின் பலியை நினைவு கூறுவது. (1 கொரி. 11:24) நாம் கர்த்தர் இராப்போஜனத்தை புசிக்கும்போது, கிறிஸ்துவையும் அவர் பாடுகளையும் நினைவு கூற வேண்டும்.

C. கர்த்தர் இராப்போஜனம் கிறிஸ்துவின் மரணத்தை தெரிவிக்கிறது. (1 கொரி. 11:26) கிறிஸ்தவர்கள் கர்த்தர் இராப்போஜனத்தை புசிக்கும்போது இயேசுவின் பிய்க்கப்பட்ட சரீரமும், சிந்தப்பட்ட ரத்தமும், உலகத்தின் பாவத்திற்காக செலுத்தப்பட்டதை தெரிவிக்கிறோம்.

D. கர்த்தர் இராப்போஜனம் இயேசு மீண்டும் வரப்போவதை தெரிவிக்கிறது: (1 கொரி 11:26) கிறிஸ்தவன் இதை புசிக்கும்போது, தான் மீண்டும் வரப்போவதாக கர்த்தர் கூறிய வாக்குத்தத்தின் மீதுள்ள விசுவாசத்தை காட்டுகிறான் (அப். 1:10-11 ; 1 தெச. 4:13-18)

## VI. கிறிஸ்துவர்கள் எப்போது கர்த்தர் இராப்போஜனத்தில் கலந்துகொள்ள வேண்டும்?

A. எருசலேம் சபை யார் இதைக்கைக்கொள்வதில் உறுதியாய் தரித்திருந்தார்கள். (அப். 2:42)

B. துரோவா பட்டணத்துசபை, வாரத்தின் முதல் நாளில் இதைக்கைக்கொண்டு வந்தனர். (அப். 20;7)

C. கொரிந்து பட்டணத்து சபை வாரத்தின் முதல் நாளில் கூடி வந்திருந்து கர்த்தர் இராப்போஜனத்தை புசித்தார்கள். (1 கொரி. 16:2 ; 11:20)

D. இன்று கிறிஸ்தவர்கள் ஒவ்வொருவரும், வாரத்தின் முதன் நாளில் கர்த்தர் இராப்போஜனத்திலே கலந்துகொண்டு உறுதியாய்த்தரித்து இருக்கவேண்டும்.

E. வாரத்தின் முதல் நாளின் முக்கியத்துவம் என்ன?

1. வாரத்தின் முதல் நாளில் கிறிஸ்து உயிர்த்தெழுந்தார் (மத். 28: 1-10)

2. வாரத்தின் முதல் நாளில் பரிசுத்த ஆவியானவர் வந்தார். (அப் 2:1-4) யூத முறமையின்படியான ஓய்வு நாளைத் தொடர்ந்து பெந்தேகோஸ்து நாள் வந்தது. (லேவி. 23;15-!6)

3. வாரத்தின் முதல் நாளில் சபை ஸ்தாபிக்கப்பட்டது. (அப். 2)

4. வாரத்தின் முதல் நாளிலே ரட்சிப்பின் திட்டம் முதல் தடவையாக கொடுக்கப்பட்டது. (அப். 2:38)

5. வாரத்தின் முதல் நாளிலே கர்த்தர் இராப்போஜனம் கைக்கொள்ளப்பட்டது. (அப். 20:7).

6. வாரத்தின் முதல் நாளிலே சுவிசேஷ காணிக்கைகள் எடுக்கப்பட்டன. (1 கொரி. 16: 1-2)

7. வாரத்தின் முதல் நாள் கர்த்தருடைய நாள் என்று அழைக்கப்படுகிறது. (வெளி. 1:10)

**V. கர்த்தர் இராப்போஜனத்திலே கலந்துகொள்ளும் முறை :—**

A. ஒவ்வொரு கிறிஸ்தவனும், கர்த்தர் இராப்போஜனத்திலே கலந்துகொள்ளும்போது தன்னைத்தானே சோதித்தறிந்து செயல்படவேண்டும். (1 கொரி. 11:28)

B. அபாத்திரமாய் ஒருவர் இதில் கலந்துகொள்ளக்கூடாது. (1 கொரி. 11:27). பயபக்தியோடும், நன்றியுணர்வோடும் கலந்துகொள்ளவேண்டும்.

C. இந்த ஐக்கிய விருந்து, பசியை போக்கும் ஒரு கேளிக்கை விருந்து அல்ல. (1 கொரி 11:28-34)

**VI. அதற்குக் கொடுக்கப்பட்ட வேத வசனப் பெயர்கள் :**

A. கர்த்தருடைய இராப்போஜனம். (1 கொரி. 11:21)

B. அப்பம் பிட்குதல். (அப். 2:42;20:7)

C. ஐக்கியம். (1 கொரி. 10:16)

D. கர்த்தருடைய பந்தி (1 கொரி. 10:21; லூக். 22:29-30)

# கேள்வி - பதில்

**1. ஒரு மனிதன் பாவமில்லாத பூரணப்பட்ட ஜீவியத்தை ஜீவிக்க முடியுமா?**

பாவமில்லாமல் யாருமில்லை. ''நமக்கு பாவமில்லை என்போமானால் நம்மை நாமே வஞ்சிக்கிறவர்களாயிருப்போம்'' (1 யோவா 1:8) ஆகையினால் கிறிஸ்தவர்கள் பாவமில்லாமல் பூரணப்பட்டவர்களாய் இருக்கும்படி எதிர்பார்க்க முடியாது. ஏனெனில் நீதிமான் ஒருவனும் இல்லையே, (ரோமர் 3:10)

**2. நாம் பூரணப்பட்டவர்களாக இருக்க முடியாதென்றால் நாம் ரட்சிக்கப்படுவது எவ்வாறு ?**

1 யோவா 1:7-ல் கூறுகிறது, 'அவர் ஒளியிலிருக்கிறதுபோல நாமும் ஒளியிலே நடந்தால் ஒருவரோடொருவர் ஐக்கியப்பட்டிருப்போம்.

அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் ரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மை சுத்திகரிக்கும்.' மனிதன் தன் சொந்த கிரியைகளினால், நீதிமானாக்கப்பட முடியாது. தன் நற்குணத்தால் மட்டுமே ரட்சிக்கப்படமுடியாது. தேவனுடைய வசனமாகிய வெளிச்சத்தில் நடந்தால் ஒரு கிறிஸ்தவன் எல்லா பாவங்களிலிருந்து, கிறிஸ்துவின் ரத்தத்தால் கழுவப்பட முடியும். கிறிஸ்தவன், கிறிஸ்துவின் ரத்தத்தில் நம்பிக்கை வைப்பதனால் கிறிஸ்துவின் நீதிக்கு பங்காளியாகிறான். இயேசுவின் உன்னதமான பலியினால் அவன் பாவம் மன்னிக்கப்படுகிறது. தேவனுடைய தயையால், விசுவாசத்தின்மூலம் அவன் ரட்சிக்கப்படுகிறான். தன் சொந்த கிரியையின்மேல் நம்பிக்கை வைப்பதாலோ, தன் சொந்த கிரியைகளினிமித்தம் தன் நீதியை புகழ்ந்து பேசுவதனாலோ ரட்சிக்கப்பட முடியாது. (எபே. 2:8-9) தேவனுடைய வார்த்தையாகிய ஒளியில் நடக்கிறதினால், ஒரு பூரணப்படாத மனிதன் கிறிஸ்துவின் ரத்தத்தின் மீதுள்ள விசுவாசத்தில் ரட்சிக்கப்படக்கூடும்.

3. கிறிஸ்துவின் மீதுள்ள விசுவாசத்தினால் வரும் ரட்சிப்பிற்கும், ஒழுக்க ஜீவியத்திற்கும் உள்ள சம்பந்தம் என்ன?

பாவியான மனிதன், பாவியை நீதிமானாக்கிறவரும், மனிதனுடைய விசுவாசத்தை நீதியாக எண்ணுகிறவருமாகிய, (ரோம. 4:5) கிறிஸ்துவில் விசுவாசம் வைக்கிறவனாயிருந்தால் மட்டும் ரட்சிக்கப்படக்கூடும். ஆனால் விசுவாசம் தேவனுடைய வார்த்தையிலிருந்து வருகிறது. (ரோம. 10:17) அவருடைய கட்டளைகளின்படி நடந்து, கிறிஸ்துவுக்கு கீழ்படிவதனால், நம் விசுவாசத்தை காட்டுகிறோம், அல்லது நிரூபிக்கிறோம். (யாக், 2:17-26) தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்படியாத விசுவாசம் ஒரு ரட்சிக்கின்ற விசுவாசம் ஆகாது. அது ஒரு செத்த விசுவாசம்(வச:26) கிறிஸ்துவுக்குள்ளான ஜீவனுள்ள விசுவாசத்தைக் காட்டும் தேவனுடைய வசனமாகிய ஒளியில் நடந்தால், அவர் தம் ரத்தத்தால் அவர்களை சுத்திகரிக்கிறார். இவ்விதமாக, ஒழுக்க ஜீவியம் அல்லது தேவனுடைய வசனத்தின்படி ஜீவிப்பது, கிறிஸ்துவின் ரத்தத்தினாலான ரட்சிப்பின் வழிகாட்டியாக இருக்கும் கிறிஸ்துவினுடைய விசுவாசத்திற்கு சம்பந்தப்பட்டிருக்கிறது.

4. ஒரு மனிதன் கிறிஸ்துவின் கட்டளைக்குக் கீழ்படிய மறுத்தால், உண்மையிலேயே கர்த்தரை நேசிக்கிறானா?

இயேசு சொன்னார் 'நீங்கள் என்னிடத்தில் அன்பாயிருந்தால் என் கற்பனைகளை கைக்கொள்ளுங்கள்' (யோவா 14:15). 1 யோவா 2:3-6 கூறுகிறது. அவருடைய கற்பனைகளை நாம் கைக்கொள்கிறவர்களா

னால், அவரை அறிந்திருக்கிறோம் என்பதை அதினால் அறிவோம். அவரை அறிந்திருக்கிறேன் என்று சொல்லியும், அவருடைய கற்பனைகளை கைக்கொள்ளாதவன் பொய்யனாயிருக்கிறான். அவனுக்குள் சத்தியமில்லை, அவருடைய வசனத்தைக் கைக்கொள்கிறவனிடத்தில் தேவனுடைய அன்பு பரிபூரணப்பட்டிருக்கும். நாம் அவருக்குள் நிலைத்திருக்கிறோம் என்பதை நாம் அதினால் அறிந்திருக்கிறோம். அவருக்குள் நிலைத்திருக்கிறேன் என்று சொல்லுகிறவன் அவர் நடந்தபடியே தானும் நடக்கவேண்டும். கிறிஸ்துவைப்போல ஒத்த நடக்கையிலே கிறிஸ்தவன்தான் கிறிஸ்துவை அறிந்தவனென்றும், கிறிஸ்துவுக்குள்ளாக இருப்பதையும் தெரிவிக்கிறான். அவருடைய கற்பனைகளைக் கைக்கொண்டு அவரில் நிலைத்திருப்பதால் மட்டும் உண்மையிலே கர்த்தரில் அன்பு கூர்ந்தவராகிறோம்.

### 5. இச்சை என்றால் என்ன?

சட்ட விரோதமாக ஆண் பெண் இருபாலரும் கொள்ளும் ஈடுபாட்டை தூண்டும் மாமிச இச்சை. ''ஒரு ஸ்திரீயை இச்சையோடு பார்க்கிறவெனும் தன் இருதயத்தில் அவளோடே விபசாரஞ் செய்தாயிற்று'' என்று இயேசு கூறினார். (மத். 5:28) இது பழைய நியாயப்பிரமாணத்தைவிட கடுமையான கட்டளை. (மத். 5;27) பால் வேறுபாடு சம்பந்தப்பட்ட காரியங்களில், கிறிஸ்தவனுடைய திட்டத்தை எவ்வளவு உயர்ந்தது என்பதைக் காட்டுகிறது. கிறிஸ்தவர்கள் தங்கள் மாம்சத்தையும் அதின் ஆசை இச்சைகளையும் சிலுவையில் அறைந்திருக்கின்றனர் (கலா. 5:4) நன்றாக வளர்ச்சியடைந்த இச்சையானது பாவத்தைப் பிறப்பிக்கும். (யாக். 1:15) விபசாரத்திற்கு மூலகாரணங்களிலிருந்து தங்களைக் காத்துக்கொள்வதன் மூலம், ஒரு கிறிஸ்தவன் எல்லா சட்ட விரோதமான வெளிப்படையான செயல்களை மேற்கொள்ள முடியும்.

### 6 ஒருவருடைய கூட்டாளிகள் யார்? என்பதில் ஏதேனும் இருக்கிறதா?

''ஒருவருடைய கூட்டாளிகள் யார்?'' என்பதில் ஏதேனும் இருக்கிறதா? 1 கொரி 15:33-ல் ஆகாத சம்பாஷனை நல்லொழுக்கத்தைக் கெடுக்கும். ''ஆகாத தோழமை ஒரு கிறிஸ்துவனுடைய ஒழுக்கத்தைக் கெடுக்கும். நல்ல சகவாசம் ஒருவனுடைய ஒழுக்கத்தை வளர்க்கும், ஆகாத சேர்க்கையை குறித்து, 2 கொரி. 6:14-18 கடுமையாக எச்சரிக்கிறது. அந்நிய நுகத்திலே அவிசுவாசிகளுடன் பிணைக்கப்படாதிருப்பீர்களாக; நீதிக்கும், அநீதிக்கும் சம்பந்தமேது? ஒளிக்கும் இருளுக்கும் ஐக்கியமேது? கிறிஸ்துவுக்கும் பேலியாளுக்கும் இசைவேது? அவிசுவாசியுடனே விசுவாசிக்கும் பங்கேது? தேவனுடைய ஆலயத்துக்கும், விக்கிரகங்களுக்கும் சம்பந்தமேது? நான் அவர்களுக்குள்ளே வாசம் பண்ணி அவர்களுக்குள்ளே உலாவி, அவர்கள் தேவனாயிருப்பேன், அவர்கள்

என் ஜனங்களாயிருப்பார்கள் என்று தேவன் சொன்னபடி, நீங்கள் ஜீவனுள்ள தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களே. ஆனபடியால் நீங்கள் அவர்கள் நடுவிலிருந்து புறப்பட்டு பிரிந்துபோய், அசுத்தமான தைத் தொடாதிருங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார். அப்பொழுது நான் உங்களை ஏற்றுக்கொண்டு, உங்களுக்கு பிதவாயிருப்பேன். நீங்கள் எனக்குக் குமாரரும், குமார்த்திகளுமாயிருப்பீர்கள் என்று சர்வ வல்லமையுள்ள கர்த்தர் சொல்லுகிறார்.''

## 7 வேதாகமம் குடிவெறியை தடைசெய்கிறதா?

தேவனுடைய வார்த்தை குடி வெறியையும், குடிவெறிக்கு அழைத்துச் செல்லும் எல்லா காரியங்களையும் கண்டிக்கிறது. ஒரு குடிகாரன் சபை அந்நியொந்நியத்திலிருந்து விலக்கப்பட வேண்டியவனாயிருக்கிகிறான். (1 கொரி. 5:11) குடிவெறியர் தேவனுடைய ராஜ்யத்தை சுதந்திரிப்பதில்லை (1 கொரி 6:9-10 ) குடிவெறி மாம்சத்தின் கிரியைகள். அவற்றை செய்கிறவன், தேவனுடைய ராஜ்யத்தை சுதந்திரிப்பதில்லை. (கலா. 5:21) மேலும் நீதி. 20:1, 23:29-35-ஐ படிக்கவும்.

## 8 குடி போதையில் மயங்காமல் ஒருவன் குடிக்க முடியுமா?

குடிப்பழக்கம், கொஞ்சமாக குடிப்பதிலிருந்துதான் ஆரம்பமாகிறது. போதைவரக் குடித்தல், அதை அருந்துபவனை இன்னும் அதிகமாக குடிக்கவைக்கும். அடிக்கடி குடிப்பவனை இது அடிமையாக்கி விடும், (நீதி. 23:25) ஆகையினால் குடிவெறியை தவிர்க்க, ஒரே வழி முழுவதுமாக போதைதரும் குடியை நீக்குதல். இதுதான் பாதுகாப்பான சரியான வழி (II பேது1:10) பொல்லாங்காய்த் தோன்றுகிற எல்லாவற்றையும் விட்டு விலகுதல் மூலம் ( 1 தெச . 5:22) ஒரு கிறிஸ்தவன், பலவீனமுள்ள சகோதரனுக்கு, தன் மாதிரியினால் இடறலுண்டாக்க மாட்டான் (கொரி 8:13) இந்தவிதமாக ஒரு கிறிஸ்தவனுடைய வெளிச்சம், தேவனை மகிமைப்படுத்த, பிரகாசிக்கும் (மத் 5:16) நாம் தீமையை வெறுத்து. நன்மையைப் பற்றிக் கொண்டிருப்போம். (ரோம 12:9)

## 9. ஒரு கிறிஸ்தவன் யோக்கியமாய் வேலை செய்யவேண்டுமா?

1 தெச. 4:11-12. அமைதியுள்ளவர்களாயிருக்கும்படி நாடவும், சொந்த அலுவல்களைப் பார்க்கவும் என்று உங்களுக்கு புத்தி சொல்லு-கிறோம். புறம்பே இருக்கிறவர்களைக் குறித்து யோக்யமாய் நடந்து ஒன்றிலும் உங்களுக்கு குறைவில்லாதிருக்கும்படி கூறுகிறது. ஒரு தொழிலாளி அல்லது எந்த வேலையைச் செய்பவராயினும், தன் ஒரு நாள் ஊதியத்திற்குத் தக்கயோக்யமான வேலையைச் செய்ய வேண்டும்.

**YOUR ATTENTION PLEASE :**

# Radio Sri Lanka Broadcasts

**ENGLISH** The voice of Truth—Speakers: Reggie Gnanasundaram, J. C. Choate, John Stacy.
All correspondence should be sent to The Voice of Truth, Post Box 3815, New Delhi-110049.
Mondays - 9: 00 to 9: 15 P. M.
Fridays - 7:45 to 8:00 P. M.

**HINDI** Satya Susamachar-Speaker:Sunny David.
All correspondence should be sent to Satya-Susamachar, Post Box 3815, New Delhi-110049.
Tuesdays-9:00 to 9-15 P. M.
Thursdays-9:00 to 9 :15 P. M.
Fridays- 9:00 to 9:15 P. M.
Sundays-12:45 to 1:00 P. M.

**TELUGU** The voice of Truth-Speaker: Joshua Gootam
All Correspondence should be sent to The Voice of Truth, Post Box 80, Kakinada 533001.
Sundays-2:30 to 2:45 P. M.
Tuesdays-2:30 to 2: 45 P. M.
Thursdays-2:30 to 2:45 P. M.
Fridays-2:30 to 2:45 P. M.
Saturdays-2:30 to 2:45 P. M.

**TAMIL** The Way of Truth-Speaker: P. R. Swamy.
All correspondence should be sent to The Way of Truth, Post Box 8405, Bangalore-560084.
Tuesdays-5:30 to 5:45 P. M.
Thursdays-6:45 to 7:00 P. M.
Sundays-6:45 to 7:00 P. M.

**MALAYALAM** The Voice of Truth-Speaker: P. K. Varghese
All correspondence should be sent to Church of Christ Thevally, Quilon-9 (Kerala)
Tuesdays-3:45 to 4:00 P. M.
Fridays-3:45 to 4:00 P. M.

**KANNADA** The Voice of Truth-Speaker:Robert Rathnakar
Box No 448, Bangalore 560004
Sundays-1:45 to 2-00 P. M.

## ALL ARE ENCOURAGED TO LISTEN

Bible Correspondence Courses and Christian Literature are available in these different languages from the addresses listed. Also the radio sermons are available in book form.

# வாசகர்களுக்கு ஓர் வேண்டுகோள்

கர்த்தருடைய கிருபையாலும், உங்கள் ஜெபத்தாலும் இத்துடன் 20 மாதங்கள் தொடர்ந்து **திருமறை ஆசான்** வெளிவர தேவன் ஒத்தாசை செய்தார். ஸ்தோத்திரம்.

எதிர்வரும் 1990-ம் ஆண்டு முதல் விலாசங்களைச் சரிபார்த்து மாவட்ட வாரியாக ஒழுங்கு படுத்த விரும்புகிறோம். இதுவரை ஒரு முறை கூட எங்களுடன் தொடர்பு கொள்ளாதவர்களின் பெயர்களை நீக்கி விட்டு, பத்திரிகை வேண்டும் என்று விண்ணப்பித்துள்ளவர்களுக்கு அனுப்ப முடிவு செய்திருக்கிறோம். தேவை என்றால் தொடர்பு கொள்ளுங்கள்.

ஒரு வேளை நீங்கள் ஏற்கனவே தொடர்பு கொண்டிருந்தாலும் கூட தயவு செய்து மீண்டும் ஒரு முறை தகவல் கொடுத்து உதவுங்கள்.

1. பெயர்:-
2. முழு முகவரி:
3. பின் கோடு:
4. மாவட்டம்:

அஞ்சல் அட்டை போதும் தயவு செய்து ஒத்துழையுங்கள்

**ஆசிரியர்**

Published by Church of christ and Printed by Sri. Vela E.V. Rajamanickam at vela Printers, Erode-638 001. Phone: 74878
Editor. E. Z. Selvanayagam.

BOOK-POST
PRINTED MATTER

To

If undelivered please return to:
The Editor
THIRUMARAI AASAAN
2, Manal Medu Street
ERODE - 638 002 (or)
Post Box No. 58 ERODE - 638 001.